# பெண்களும் தொழிலும்

## ஓர் இஸ்லாமிய நோக்கு

அஷ்ஷெய்க். ஏ.ஸி. அகார் முஹம்மத்

## பொருளடக்கம்


பெண்கள் தொடர்பான மதங்களின் நிலைப்பாடு

ஜாஹிலிய்யா காலத்துப் பெண்

ஆண் - பெண் வேறுபாடு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

குடும்ப வாழ்வில் பெண்களுக்குரிய உரிமைகள்

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகள்

1. வாரிசு சொத்து பெறும் உரிமை

2. வஸிய்யத் செய்யும் - பெறும் உரிமை

3. கொடுக்கல் - வாங்கல் உரிமை

4. இரவல் வாங்கும் - வழங்கும் உரிமை

5. வக்பு செய்யும் - பெறும் உரிமை

6. ஸதகா செய்யும் உரிமை

7. பிணை நிற்கும் உரிமை

8. அடகு வைக்கும் உரிமை

இஸ்லாமிய வரலாற்றில் பெண்களும் தொழிலும்

1. கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா)

2. ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா)

பெண்கள் தொழில் செய்தல்- தொடர்பாக இஸ்லாம் கூறும் அடிப்படைகள்

1. பெண்களின் இயல்பு பாதுகாக்கப்படல் வேண்டும்

2. வீடு என்ற சாம்ராஜ்யத்தின் நிர்வாகம் பாதிக்கப்படக்கூடாது

3. மார்க்கம்- குடும்பம்- சமூகம் பாதிக்கப்படக்கூடாது

பெண்ணிலைவாதிகளின் வாதங்கள்

1. பெண் தொழில் செய்வதற்காக கட்டாயம் வெளியே செல்ல வேண்டும்

2. குடும்பத்தின் நலன் பெண் தொழில் செய்வதை வேண்டி நிற்கின்றது

3. பெண்ணின் நலன் அவள் தொழில் செய்வதை வேண்டி நிற்கின்றது

4. தொழிலென்பது பெண்ணுக்கு ஓர் ஆயுதம்

பெண்ணிலைவாதிகளின் வாதங்களுக்கான பதில்கள்

1. பெண் தொழில் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறாள்

2. குடும்ப, சமூகக் கட்டமைப்பு சிதைக்கப்படுகிறது

3.பெண்ணின் நலம் பாதிக்கப்படல்

4. தொழில் ஓர் ஆயுதமா?

பெண் தொழில் புரியச் செல்வதன் பாதகமான விளைவுகள்

1. பெண்ணிற்கு ஏற்படக்கூடிய பாதிப்பு

2. கணவருக்கு ஏற்படும் பாதிப்பு

3. குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு

4. ஆண் இனத்திற்கே ஏற்படும் பாதிப்பு

5. தொழிலுக்கு ஏற்படும் பாதிப்பு

6. பண்பாட்டு ரீதியான பாதிப்பு

7. சமூக வாழ்வில் ஏற்படும் பாதிப்பு

பெண்கள் தொழில்புரிய அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்கள்

1. பெண்கள் தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம்

2. இஸ்லாமிய அடிப்படைகள் நடைமுறையிலில்லாத சமூகமாக இருத்தல்

3. சமூகத்தின் தேவை, நலன்

4. சமூகத்தில் தொழிலாளர் பற்றாக்குறை நிலவுதல்

தொழிலுக்குச் செல்கின்ற பெண்கள் பேண வேண்டிய நிபந்தனைகள்

1. ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்ட தொழிலாக இருத்தல்

2. தொழிலுக்குச் செல்லும்போது ஷரீஆ வரம்புகளைப் பேணுதல்

3. செய்யும் தொழில் அடிப்படைக் கடமைகளுக்கு தடையில்லாமல் இருத்தல்

தொழில் செய்யும் பெண்களுக்கு சமூகம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்

1. பொருத்தமான தொழில்களை அவர்களுக்கு அமைத்துக் கொடுத்தல்

2. பெண்களுக்கான தனியான நிறுவனங்கள் அமைத்தல்

3. விஷேட விடுமுறைகளை பெண்களுக்கு செய்து கொடுத்தல்

பெண்கள் தொழில் செய்யும் போது பேண வேண்டிய விழுமியங்கள்

1. தூய்மை

2. அமானத்- நம்பிக்கையும் பொறுப்புணர்வும்

3. நேரம் தவறாமை

4. திறம்படச் செய்தல்

5. தொழில் உழைப்புக்கான வழி (Profession) மட்டுல்ல; அது ஒரு பணி (Mission)

01

# பெண்களும் தொழிலும்

# ஓர் இஸ்லாமிய நோக்கு

## அறிமுகம்

பெண்கள் தொழில் புரிதல் தொடர்பான ஷரீஆவுடைய நோக்கையும் அவ்வாறு பெண்கள் தொழில் புரிவதாக இருந்தால் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள், ஷரீஆ கூறும் நெறிமுறைகள், வரையறைகள் என்பவற்றையும் விளங்குவதற்கு சில முக்கியமான அடிப்படைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய அடிப்படைகளின் வெளிச்சத்தில்தான் பெண்கள் தொழில் புரிவது தொடர்பான விடயம் அலசி ஆராயப்பட வேண்டும்.

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு முன் பெண்களை ஏனைய சமூகத்தினர் எவ்வாறு நடத்திக் கொண்டிருந்தார்கள் என்பதைத் தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

## பெண் தொடர்பான மதங்களின் நிலைப்பாடு

வரலாற்றிலே பெண்கள் தொடர்பாக பலரும் பலவித நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தனர். அவர்கள் பெண்களைப் பற்றி எவ்வாறான பார்வையைக் கொண்டிருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்வது இஸ்லாம் பெண்களுக்கு எத்தகைய கண்ணியத்தை வழங்கியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள உதவும்.

இந்த வகையில், கிரேக்க நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள் பெண்களை வியாபாரப் பொருட்களாக அல்லது பண்டங்களாகவே கருதினர். தான் விரும்பியபோது பெண்ணை விற்கவும் தான் விரும்பிய பெண்ணை வாங்கவும் செய்தனர். மேலும் சொத்துக்கள் அனைத்தையும் ஆண்களுக்கு வழங்கினர். அதன் உரிமையையும் அவர்களுக்கே அளித்தனர். பெண்களுக்கு அனைத்து உரிமைகளும் தடுக்கப்பட்டிருந்தன. மேலும் அப்பெண்களுக்குச் சொத்துரிமை, கொடுக்கல், வாங்கல் போன்ற உரிமைகளும் தடுக்கப்பட்டிருந்தன.

கிரேக்க தத்துவஞானி சோக்ரடீஸ், ‘‘பெண்கள் இருப்பது உலகின் வீழ்ச்சிக்கு மிகப் பெரும் மூலகாரணமாகும். மேலும், பெண்கள் விஷ மரத்திற்கு ஒப்பானவர்கள்; அம்மரத்தின் புறத்தோற்றம் அழகாக இருக்கும். எனினும், அதன் கனிகளை சிட்டுக் குருவிகள் தின்றவுடனேயே அவை இறந்து விடுகின்றன’’ என்று கூறியுள்ளார்.

அதேபோல் ரோமர்கள் பெண்களை உயிரற்ற சடப்பொருளாகவே கருதினர். பெண்கள் உயிரற்ற பொருளாகக் கருதப்பட்டதால் அவர்கள் மீது வெந்நீரை ஊற்றியும் தூண்களில் கட்டிவைத்தும் வேதனை செய்தனர். இது மட்டுமின்றி பெண்களை குதிரைகளின் வால்களில் கட்டி அவர்கள் மரணித்து போகின்ற அளவிற்கு மிக விரைவாக ஓட்டி விடுவார்கள்.

இந்தியர்கள் கணவன் இறந்து விட்டால் அவனின் உடலுடன் மனைவியையும் எரித்து விடுபவர்களாகவும் இருந்திருக்கின்றனர். இதனை ‘உடன்கட்டை ஏறுதல்’ என அழைத்தனர். இந் நிலை இன்றும்கூட இந்தியாவில் காணப்படுகிறது.

இவ்வாறே சீனர்களும் பெண்களை செல்வங்களை அழித்து விடக் கூடிய தண்ணீருக்கு உவமித்தனர்.

யூதர்கள் பெண்கள் சாபத்திற்குரியவர்களென கருதுகின்றர். ஏனெனில் அவள்தான் ஆதம் (அலை) அவர்களை வழிகெடுத்து மரக் கனியை சாப்பிடச் செய்து சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றி விட்டாள்.

கிறிஸ்தவர்கள் பெண்களை ஷைத்தானின் வாசலாகக் கருதுகிறார்கள். இன்னும் புனித யுன்பெஃன்துரா என்பவர் கூறினார்: ‘‘நீங்கள் பெண்களைக் கண்டால் அவளை மனித இனத்தைச் சார்ந்தவள் எனக் கருதி விடாதீர்கள். அது மட்டுமல்ல அவளை ஓர் உயிருள்ள ஜீவனாகக் கூட கருதாதீர்கள். மாறாக நீங்கள் காண்பது நிச்சயமாக ஷைத்தானின் உருவத்தைத்தான். இன்னும் நீங்கள் செவியேற்கும் அவளது சப்தம் பாம்பின் சீற்றம்தான்.’’

## ஜாஹிலிய்யாக் காலத்துப் பெண்

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் அதன் வருகை முழுமனித சமுதாயத்திற்கும் ஓர் அருளாக அமைந்தது என்பதை மனித வரலாற்றை நேர்மையுடன் பார்க்கின்ற எவரும் எளிதில் புரிந்து கொள்வர். இஸ்லாம் எல்லோருக்கும் அருளாக இருந்தாலும் ஒப்பீட்டு ரீதியில் அது பெண்ணினத்திற்கு பேரருளாக அமைந்தது என்பது ஒரு பெரிய உண்மையாகும். ரஸூலுல்லாவின் வருகையும் இஸ்லாத்தின் தோற்றமும் நிகழ்ந்த அந்த கால கட்டத்தை சரியாக அறியும் ஒருவர் இவ்வுண்மையை ஏற்கத் தயங்க மாட்டார்.

அன்று பெண் என்பவள்,

1. ஆணின் அடிமை

2. அவனின் சிற்றின்பப் பொருள்

3. ஒருவர் விட்டுச் செல்லும் வாரிசுச் சொத்தின் ஓர் அங்கம்

4. மனிதப் பிறவியாக கருதப்பட முடியாதவள்

5. ஒரு தீமை, அத்தியவசியத் தீமை

6. குடும்பத்தின் அவமானச் சின்னம்

7. ஒரு சுமை

8. எத்தகைய உரிமையையும் பெறத் தகைமையற்றவள் என்றெல்லாம் கருதப்பட்டாள்.

பெண்ணினம் இவ்வாறு மிக இழிவாக நோக்கப்பட்டும் கேவலமாக நடாத்தப்பட்டும் வந்த ஒரு காலச் சூழ்நிலையிலேயே நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் தூதைச் சுமந்து வந்தார்கள். அன்னார் கொண்டு வந்த தூது பொதுவாக மனித விடுதலையை இலக்காகக் கொண்டிருந்தது. மட்டுமல்ல, குறிப்பாக பெண் விடுதலையை அது அடிநாதமாகக் கொண்டிருந்தது. இஸ்லாத்தை, 'பெண்களுக்கு விடுதலையளித்த மார்க்கம்' என வர்ணித்தால்கூட அது மிகையாகாது.

இஸ்லாத்தை ஏற்ற முதல் மனிதர் ஒரு பெண் என்பதும் இஸ்லாத்திற்காக முதலில் உயிர்த்தியாகம் செய்தவரும் ஒரு பெண் என்பதும் நினைவு கூரத்தக்கதாகும்.

இஸ்லாம்,

1. உயிருடன் புதைக்கப்பட்ட பெண்ணுக்கு உயிர் கொடுத்து காத்த மார்க்கம்.

2. வாரிசுச் சொத்தில் பண்டத்துடன் பண்டமாக பகிர்ந்தளிக்கப்பட்டவளுக்கு பண்டத்தில் பங்கு பெற்றுக் கொடுத்த மார்க்கம்.

3. அவமானச் சின்னமாக கருதப்பட்டவளை சுவனத்து அரசியாக, தனது பெற்றோரை நரகம் செல்ல விடாமல் காக்கும் பெரும் பாக்கியமாக மாற்றிய மார்க்கம்.

4. அகதியின் நிலையில் இருந்தவளை அதிதியின் நிலைக்கு கொண்டு வந்த மார்க்கம்.

5. வெறும் சிற்றின்பப் பொருளாகக்

கருதப்பட்டவளுக்கு சுவனத்திற்கான கடவுச்சீட்டை வழங்கும் தாய்மை என்ற உயர் அந்தஸ்த்தை வழங்கிய மார்க்கம்.

இஸ்லாம் பெண்களை மனிதன், குழந்தை, மகள், சகோதரி, தாய், பாட்டி போன்ற பல நிலைகளில் வைத்து கௌரவித்திருக்கின்றது. ஒவ்வொரு நிலையிலும் அவரவர்களுக்கான உரிமைகளையும் உத்தரவாதப் படுத்தியுள்ளது.

“பெண்கள் ஆண்களின் சரிபாதி, சமபாதி” என்றார்கள் நபி (ஸல்) அவர்கள். (அஹ்மத், அபுதாவுத், திர்மிதி)

**ஆண்–பெண் வேறுபாடு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்**

ஆண்-பெண் வேறுபாட்டைப் பொறுத்தவரையில் இஸ்லாம் ஆண்-பெண் என்ற பாகுபாடு இல்லாமல் இரு பாலாருக்குமிடையே சமத்துவத்தைப் பேண விரும்புகிறது. சில விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் தவிர பொதுவாக இஸ்லாம் ஆண்-பெண் இரு பாலாருக்குமிடையே அனைத்து விவகாரங்களிலும் சமத்துவத்தைப் பேணுகின்றது. ஸூரா ஆல இம்ரானின் 195ம் வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

அல்லாஹ் அவர்களுடைய பிரார்த்தனைக்குப் பதிலளித்து பின்வருமாறு கூறுகின்றான்;

“ஆணோ பெண்ணோ உங்களில் ஒருவருடைய செயலையும் நான் வீணாக்க மாட்டேன். நீங்கள் ஒரு சாரார் மற்றைய சாராரை சார்ந்தவர்களாக இருக்கின்றீர்கள்.”

(ஆல இம்ரான்: 195)

ஆணோ-பெண்ணோ உங்களில் எவராக இருந்தாலும் அவர் செய்கின்ற எந்த ஒரு செயலையோ, பணியையோ, வேலையையோ நான் வீணாக்க மாட்டேன் என்று அல்லாஹ் கூறுகிறான். இது ஆண்-பெண் என்ற வேறுபாடு காட்டப்படுவதில்லை என்பதைக் காட்டுகிறது. ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அல்லாஹ் மனிதர்களுடைய செயற்பாடுகளைத்தான் பார்க்கிறான்; அனைவரது செயற்பாட்டிற்கும் நிறைவான கூலியை வழங்கத் தயாராக இருக்கின்றான். இதில் எந்தவொரு வேறுபாட்டையும் அவன் காண்பிப்பதில்லை.

“ஆணோ பெண்ணோ முஃமினாக இருக்கும் நிலையில் எவர் நற்காரியங்கள் செய்கிறாரோ நிச்சயமாக நாம் அவருக்கு நல்ல வாழ்க்கையை வழங்குவோம். மேலும் அத்தகையவர்கள் செய்து கொண்டிருந்த நற்காரியங்களுக்கு நிறைவான கூலியையும் நாம் கொடுப்போம்.” (அந்நஹ்ல்: 97)

ஆண்-பெண் என்ற பாகுபாடில்லாமல் யாராக இருந்தாலும் ஈமான் கொண்ட நிலையில் நற்காரியங்கள் செய்கிறாரோ அவருக்கு நல்ல வாழ்க்கையையும் அவர்கள் செய்து கொண்டிருந்த செயல்களுக்கு உரிய கூலியையும் நிச்சயமாக நாம் வழங்குவோம் என்று அல்லாஹ் உறுதியாகக் கூறுகின்றான்.

இதேபோல ஸூரா அந்நிஸாவின் 124 வது வசனத்தில் கூறுகின்றான்:

“ஆணோ பெண்ணோ யார் முஃமினாக இருக்கும் நிலையில் நற்காரியங்கள் செய்கின்றாரோ நிச்சயமாக அவர்கள் சுவனம் நுழைவார்கள்.” (அந்நிஸா: 124)

ஆணோ-பெண்ணோ யார் ஈமான் கொண்ட நிலையில் நற்காரியங்களில் ஈடுபடுகின்றார்களோ அவர்கள் நிச்சயம் சுவனம் நுழைவார்கள். அவர்களில் எவருக்கும் அணுவளவு அநீதியும் இழைக்கப்பட மாட்டாது. ஆண் என்ற காரணத்தினாலோ அல்லது பெண் என்ற காரணத்தினாலோ எவருக்கும் எந்த அநீதியும் இழைக்கப்பட மாட்டாது. அவர்களது செயற்பாடுகளுக்கான கூலி கூட்டியோ குறைத்தோ வழங்கப்பட மாட்டாது. அனைவரது செயலுக்கும் நிறைவான கூலி கிடைக்கும். இதில் ஆண்-பெண் என்ற வேறுபாடு கிடையவே கிடையாது என்று இந்த ஆயத் தெளிவாகச் சொல்கிறது.

இம் முப்பெரும் ஸூராக்களில் வரும் முப்பெரும் வசனங்கள் இஸ்லாம் எவ்வாறு பால் வேறுபாட்டைக் கவனத்திற் கொள்ளாமல் ஆணையும் பெண்ணையும் நூற்றுக்கு நூறு வீதம் ஒரே தரத்தில் வைத்து நோக்குகிறது என்பதனை மிகத் தெளிவாகவும் முடிவாகவும் அழகாகவும் எடுத்துரைக்கின்றன.

## குடும்ப வாழ்வில் பெண்களுக்குரிய உரிமைகள்

இல்லற வாழ்வில் பெண்ணுக்குரிய அனைத்து உரிமைகளையும் இஸ்லாம் நிறைவாக வழங்கியுள்ளது. ஆரம்பமாக தனது வாழ்க்கைத் துணைவனை தெரிவு செய்யும் உரிமையை அது பெண்ணுக்கு வழங்கியுள்ளது.

ஒரு விதவையை அவளது முடிவு பெறப்படாமல் திருமணம் செய்து வைத்தலாகாது. கன்னிப் பெண்ணையும் அவளது சம்மதத்தைப் பெறாமல் திருமணம் செய்து வைக்கக் கூடாது என்பது நபியவர்களின் கட்டளை. இதனை நபி (ஸல்) அவர்கள் கூறியபோது, *''அல்லாஹ்வின் தூதரே, அவளது சம்மதம் எப்படி பெறப்படல் வேண்டும்'' என ஸஹபாக்கள் வினவினர். அப்போது நபி (ஸல்) அவர்கள், ''அவளது மௌனமே அவளது சம்மதமாகும்'' என்றார்கள். (புகாரி, அஹ்மத்)*

*''ஒரு விதவை அவளது பொறுப்புதாரியை (வலி) விட அவளது விவகாரத்தைத் தீர்மானிக்கக் கூடிய அருகதையும் தகுதியும் உடையவளாவாள். ஒரு கன்னிப் பெண்ணைப் பொறுத்தவரையில் அவளது சம்மதம் கோரப்படல் வேண்டும். அவளது மௌனமே அவளது சம்மதமாகும்.'' (முஸ்லிம், திர்மிதி, நஸாஈ)* என்ற நபிமொழியும் இங்கு குறிப்பிடத்தக்கது.

*''ஹன்ஸா பின்த் கிதாம் அல்அன்ஸாரியா என்ற விதவைப் பெண்ணை அவளின் தந்தை அவளது விருப்பத்திற்கு மாற்றமாக ஒருவருக்கு மணம் முடித்து வைத்தார். அப்பெண் இது பற்றி நபியவர்களிடம் முறைப்பாடு செய்யவே அன்னார் அத்திருமணத்தை செல்லுபடியற்றதாக ஆக்கினார்கள்.'' (புகாரி, திர்மிதி, இப்னு மாஜா)*

*''மற்றொரு சந்தர்ப்பத்தில் ஒரு கன்னிப் பெண் நபியவர்களிடம் வந்து தனது தந்தை தனது விருப்பத்திற்கு மாற்றமாக தன்னை ஒருவருக்கு மணம் முடித்து வைத்துள்ளதாக முறைப்பட்டாள். இதனைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் அத்திருமணத்தை அந்தப் பெண்ணின் தெரிவிற்கு விட்டார்கள்.'' (அபுதாவுத், இப்னு மாஜா)*

மேற்கண்ட ஹதீஸ்கள், தான் விரும்பாத தனக்கு திருப்தி இல்லாத ஒருவரை மணம் முடித்து வைக்க 'வலி' முனைகின்ற போது அதனை மறுக்கின்ற உரிமை ஒரு பெண்ணுக்கு உண்டு என்பதைக் காட்டுகின்றன. உண்மையில் தகப்பனோ அல்லது வலி ஆக இருப்பவரோ ஒரு பெண்ணை அவள் விரும்பாத ஓர் ஆணுக்கு நிர்ப்பந்தித்து மணம் முடித்துக் கொடுக்கும் உரிமையைப்

பெற்றவர் அல்ல.

ஏலவே திருமணம் முடித்து பின்னர் விதவையான ஒரு பெண்ணைப் பொறுத்தவரையில் அவள் திருப்தி காணாத ஒருவருக்கு அவளை மணம் முடித்து வைப்பதற்கு எவருக்கும் எந்த உரிமையோ அதிகாரமோ இல்லை என்பது இமாம்களின் ஏகோபித்த நிலைப்பாடாகும். வயது வந்த ஒரு கன்னிப் பெண்ணைப் பொறுத்தவரையிலும் அவளையும் குறிப்பிட்ட ஓர் ஆணை மணம் முடிக்க நிர்ப்பந்திக்க முடியாது என்பதே பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும்.

பருவ வயதை அடைந்த ஒரு கன்னிப் பெண்ணின் செல்வத்தை அவளது அனுமதியின்றி கையாள்வதற்கு அவளது தந்தைக்கோ மற்றொருவருக்கோ அனுமதியில்லை என்பதும் முடிவான கருத்தாகும். பொருள் சார்ந்த அல்லது பொருளாதாரம் சார்ந்த விடயத்தில் ஷரீஅத்தின் நிலைப்பாடு இதுவாகும்.

வாழ்க்கைத் துணைவனைத் தெரிவு செய்யும் உரிமையை வழங்கியிருப்பது போல மஹர் பெறல், நபகா-வாழ்க்கைச் செலவைப் பெறல் முதலான மற்றும் பல உரிமைகளையும் இஸ்லாம் வழங்கியுள்ளது.

## இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகள்

இஸ்லாம் ஆண்-பெண் வேறுபாட்டை எவ்வாறு நோக்குகிறது என்பதையும் குடும்ப வாழ்வில் அவர்களுக்குள்ள உரிமைகளையும் பார்த்தோம். இந்த அடிப்படையில் ஆண்களுக்கு பொருளாதாரம் சார் உரிமைகளை இஸ்லாம் வழங்கியிருப்பது போலவே பெண்களுக்கும் அவ்வாறான பொருளாதாரம் சார் உரிமைகளை இஸ்லாம் வழங்கியிருக்கிறது என்பதைப் பார்ப்பது பெண்கள் தொழில் செய்ய முடியுமா? முடியாதா? என்பதை நாம் அணுகுவதற்கும் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறோம். ஏனெனில் தொழில் என்பது பொருளாதாரத்தோடு சம்பந்தப்பட்டது. தொழில் செய்வது, உழைப்பது, சம்பாதிப்பது என்பது பொருளோடும் பண்டத்தோடும் பொருளாதாரத்தோடும் தொடர்புபட்டது. எனவே, பொருளாதார உரிமைகள் தொடர்பான அடிப்படைகளை விளங்கிக் கொள்வது இது பற்றிய தெளிவைப் பெற உதவும் என நம்புகிறோம்.

## 1. வாரிசு சொத்து பெறும் உரிமை

இஸ்லாம் பெண்களுக்கு வாரிசுச் சொத்தில் பங்கு வழங்குகிறது என்பதே பெண்ணுக்கு இஸ்லாம் சொத்துரிமையை கொடுத்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஆண் எவ்வாறு சொத்தை வைத்துக் கொள்வதற்கு, சொத்தின் மீது உரிமை-உடமையுள்ளவனாக இருப்பதற்கு அனுமதி பெற்றிருக்கின்றானோ அதேபோல் பெண்ணும் பொருளை வைத்துக் கொள்ள, சொத்தை உடமையாக (Ownership) வைத்துக் கொள்ள அனுமதி பெறுகிறாள். வாரிசு சொத்தில் பெண்ணுக்குப் பங்குள்ளது என்பதே தனிப்பட்ட ரீதியில் ஒரு பெண் தனக்கென்று சொத்துக்கள், பொருட்களை வைத்திருப்பதற்கு அனுமதி பெறுகின்றாள் என்பதற்கு தெளிவான ஆதாரம் ஆகும்.

ஒரு பெண் மகளாக, மனைவியாக, தாயாக, பாட்டியாக, சகோதரியாக சிலபோது பெரிய தாய் (பெரியம்மா), சிறிய தாய் (சாச்சி) போன்ற நிலையிலும் வாரிசுச் சொத்தில் பங்கு பெறுகிறாள். வாரிசுச் சொத்தில் பங்கேற்கும் உரிமையையும் வாரிசாகப் பெற்ற சொத்தை உடைமையாக்கிக் கொள்ளும் உரிமையையும் ஒரு பெண் பெற்றுக் கொள்கின்றாள்.

ஜாஹிலிய்யாக் காலத்தைப் பொறுத்தவரையில் இதற்கு நேர்மாற்றமான நிலை காணப்பட்டது. ஆண் இறந்துவிட்டால் அவர் விட்டுச் சென்ற சொத்துக்களை பகிர்ந்தளிக்கின்றபோது அவர்களுடைய பெண்மக்களும் பண்டங்களோடு பண்டங்களாகப் பகிர்ந்தளிக்கப்பட்டார்கள். இவ்வாறான நிலையில் காணப்பட்ட பெண்ணுக்கு இஸ்லாம் வாரிசுச் சொத்தில் எந்தளவுதூரம் பங்கு வழங்கியுள்ளது என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

*‘‘பெற்றோர் அல்லது நெருங்கிய உறவினர்கள் விட்டுச் சென்ற (சொத்)தில் ஆண்களுக்கு பாகமுண்டு. அவ்வாறே பெற்றோர் அல்லது நெருங்கிய உறவினர் விட்டுச் சென்ற (சொத்)தில் பெண்களுக்கும் பாகமுண்டு – (அதிலிருந்துள்ள சொத்து) குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பாகமாகும்.’’ (4:7)*

*‘‘உங்கள் பிள்ளைகளில் ஓர் ஆணுக்கு, இரண்டு பெண்களுக்குக் கிடைக்கும் பங்கு போன்று கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான். பெண்கள் மட்டும் இருந்து அவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் அவர்களுக்கு இறந்து போனவர் விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பாகம் கிடைக்கும். ஆனால் ஒரே பெண்ணாக இருந்தால் அவள் பங்கு பாதியாகும். இறந்தவருக்கு குழந்தை இருக்குமானால் இறந்தவர் விட்டுச் சென்றதில் ஆறில் ஒரு பாகம் அவரது பெற்றோர் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் இறந்தவருக்கு குழந்தை இல்லாதிருந்து பெற்றோர் மாத்திரமே வாரிசாக இருந்தால் அவர் தாய்க்கு மூன்றில் ஒரு பாகம் (மீதி தந்தைக்கு உரியதாகும்). இறந்தவருக்கு சகோதரர்கள் இருந்தால் அவர் தாய்க்கு ஆறில் ஒரு பாகம்தான் (மீதி தந்தைக்கு சேரும்). இவ்வாறு பிரித்துக் கொடுப்பது அவர் செய்துள்ள மரண சாஸனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னர்தான். உங்கள் பெற்றோர்களும் குழந்தைகளும் – இவர்களில் யார் நன்மையளிப்பதில் உங்களுக்கு நெருக்கமாக இருப்பவர்கள் என்று நீங்கள் அறிய மாட்டீர்கள். ஆகையினால் (இந்த பாகப் பிரிவினை) அல்லாஹ்விடமிருந்து வந்த கட்டளையாகும். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவனாகவும் மிக்க ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.’’ (4:11)*

எனவே, வாரிசுச் சொத்தில் ஓர் அங்கமாகக் கருதப்பட்ட பெண்ணை வாரிசுச் சொத்தில் பங்குகொள்ளும் நிலைக்கு

இஸ்லாம் மாற்றியது. வாரிசுச் சொத்திலே ஒரு பகுதியாக வாரிசுச் சொத்தோடு சொத்தாக, பண்டத்தோடு பண்டமாக பகிர்ந்தளிக்கப்பட்ட பெண் வாரிசுச் சொத்தில் பங்கேற்கும் நிலைக்கு உயர்த்தப்பட்டாள். பல்வேறு நிலைகளில் வாரிசுச் சொத்தில் பங்கேற்கும் உரிமையை அவள் பெறுகிறாள். எனவே, ஆண் சொத்துக்களை வைத்திருக்க உரிமையைப் பெற்றிருப்பது போலவே பெண்ணும் சொத்துக்களை வைத்திருப்பதற்கான உரிமையைப் பெறுகிறாள். இந்த வகையில் ஆரம்பமாக அவளுக்கு வாரிசுச் சொத்தில் பங்கு கிடைக்கிறது.

உதாரணமாக கணவனை இழந்த ஒரு பெண்ணுக்கு குறைந்த பட்சம் அவரது சொத்தில் 1/8 பங்கு கிடைக்கிறது. அதே போல மகள் என்ற நிலையில், சகோதரி என்ற நிலையில் மற்றும் பல நிலைகளில் அந்தப் பெண்ணுக்கு வாரிசுச் சொத்தில் பங்குபெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இது பொருளாதாரத் துறையில் ஒரு பெண்ணுக்கு சொத்துக்களை வைத்திருக்க முடியும் என்பதற்கு ஓர் உதாரணம் ஆகும்.

**2. வஸிய்யத் செய்யும்– பெறும் உரிமை**

ஒரு பெண்ணுக்கு தன்னுடைய சொத்தை வஸிய்யத் செய்வதற்கு உரிமை இருக்கிறது. அதேபோல் மற்றொருவரால் வஸிய்யத் செய்யப்பட்ட சொத்தை தன் உடமையாக்கிக் கொள்வதற்கும் உரிமை இருக்கிறது.

உதாரணமாக, குறித்த பெண்ணுக்கு தனது சொத்திலிருந்து இந்த அளவைக் கொடுங்கள் என ஒருவர் தனது மரண சாசனத்தில் அல்லது உயிலில் (Last Will) குறிப்பிட்டிருந்தால் அந்தப் பங்கைப் பெறுவதற்குரிய உரிமையை அந்தப் பெண் பெறுகிறாள்.

தன்னுடைய சொத்தை ஒரு நிறுவனத்திற்கு அல்லது ஒரு தனிமனிதருக்கு வஸிய்யத் செய்வதற்கும் தனது உயிலாக (Last Will) எழுதுவதற்கும் ஒரு பெண் உரிமை பெற்றிருக்கிறாள்.

**3. கொடுக்கல் – வாங்கல் உரிமை**

கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் உரிமை எனும்போது பொருட்களை வாங்கும் உரிமையையும் பொருட்களை விற்கும் உரிமையையும் ஒரு பெண் பெறுகின்றாள். அதேபோல் தனது சொத்தை வாடகைக்கு விடும் உரிமையையும் ஓர் ஆணின் தொடர்பில்லாமல் தன்னுடைய சொத்தை தான் விரும்பியவாறு வாடகைக்கு விடும் உரிமையையும் ஒரு பெண் பெறுகின்றாள்.

**4. இரவல் வாங்கும் – வழங்கும் உரிமை**

தன்னிடமிருக்கின்ற பொருட்களை இரவல் வழங்கவும் மற்றவரிடமிருக்கின்ற பொருட்களை தனக்குத் தேவை ஏற்படுகின்றபோது இரவலாகப் பெறவும் ஒரு பெண் உரிமை பெறுகின்றாள்.

**5. வக்பு செய்யும் – பெறும் உரிமை**

ஒரு பெண், ஆணைப் போலவே தன்னிடமிருக்கின்ற சொத்தை வக்பு செய்வதற்கு -அல்லாஹ்வின் பாதையில் வழங்குவதற்கு- உரிமையைப் பெறுகின்றாள். தனது உடமையை ஒரு மஸ்ஜிதைக் கட்டுவதற்கு, ஒரு மத்ரஸாவை நிறுவுவதற்கு, ஒரு தஃவா நிலையத்தை அமைப்பதற்கு, ஒரு பாடசாலைக்கு, ஒரு பல்கலைக்கழகத்திற்கு, ஒரு வைத்தியசாலைக்கு, ஒரு பொதுப் பணிக்கு, ஒரு சமூகப் பணிக்கு அல்லாஹ்வின் பெயரில் வக்பு செய்வதற்கு ஓர் ஆணுக்கு உரிமையுள்ளது போலவே ஒரு பெண்ணுக்கும் உரிமை இருக்கிறது.

**6. ஸதகா செய்யும் உரிமை**

தன்னுடைய சொத்தை ஸதகா செய்வதற்கும்

தன்னிடமிருக்கின்ற அசையும்-அசையா சொத்துக்கள் என்பவற்றை தர்மம் செய்வதற்கும் பெண்களுக்கு உரிமை இருக்கிறது.

**7. பிணை நிற்கும் உரிமை**

கொடுக்கல்-வாங்கலில் ஒருவருடைய சார்பில் பிணை நிற்பதற்கு அல்லது பொறுப்பு நிற்பதற்கு ஓர் ஆணைப் போலவே ஒரு பெண்ணுக்கும் பொறுப்பு நிற்பதற்கான உரிமை இஸ்லாத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**8. அடகு வைக்கும் உரிமை**

ஷரீஆ வரையறைகளை மீறாமல் பொருட்களை அடகு வைப்பதற்கான உரிமையும் பெண்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

இவ்வாறு எல்லா வகையான தொழில்சார், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் கொடுக்கல்-வாங்கல் விவகாரங்களிலும் ஆண்களைப் போலவே சுதந்திரமாக ஈடுபடக்கூடிய பூரணமான முழுமையான உரிமையை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியிருக்கிறது.

வாரிசு சொத்து, வஸிய்யத், வாங்கும்-விற்கும் உரிமை, வாடகைக்கு விடுதல், இரவல் வழங்குதல், வக்பு செய்தல், தர்மம் செய்தல், பிணை நிற்றல், அடகு வைத்தல்... என இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகளை பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.

அதுமாத்திரமன்றி, பெண்களுக்கு நேரடியாகவே எல்லா வகையான சொத்துக்களையும் வைத்துக் கொள்வதற்கு பூரணமான உரிமை இருக்கிறது என அல்குர்ஆன் கூறுகிறது.

**“ஆண்கள் சம்பாதித்தவை ஆண்களுக்குச் சொந்தமானவை ஆகும். அவ்வாறே பெண்கள் உழைத்தவை பெண்களுக்குச் சொந்தமானவையாகும்.” (அந்நிஸா: 32)**

ஆண்கள் சம்பாதித்தவை ஆண்களுக்கு சொந்தமானதாகவும் அவற்றின் உரிமையும் உடமையும் அவர்களுக்குரியதாகவும் இருப்பது போல பெண்கள் உழைத்தவையும் மற்றும் அவர்களுக்குக் கிடைத்த பொருட்கள், சொத்துக்கள் என்பனவும் அவர்களுக்கு உரியவையாகும் என அல்குர்ஆன் தெளிவாக சொல்கிறது.

# 05

## இஸ்லாமிய வரலாற்றில்

## பெண்களும் தொழிலும்

இஸ்லாமிய வரலாற்றில் பெண்கள் தொழில் செய்திருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக ரஸூலுல்லாஹ்வின் மனைவிமார்களுள் இருவரைக் குறிப்பிடலாம்.

### 1. கதீஜா (ரழியல்லாஹூ அன்ஹா)

கதீஜா (ரழியல்லாஹூ அன்ஹா) அவர்கள் ஒரு தொழிலதிபராக இருந்ததை வரலாற்றிலே பார்க்கிறோம். மேலும் மிகப் பெரிய வர்த்தகத்திற்கு சொந்தக்காரியாக அவர்கள் இருந்தார்கள். நுபுவ்வத்திற்கு முன்பு நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் கூட கதீஜா (ரழியல்லாஹூ அன்ஹா) அவர்களின் வியாபாரத்தை அவர்களது சார்பில் செய்யக் கூடிய அளவுக்கு அவர்களது வியாபாரம் வளர்ச்சியடைந்து இருந்தது.

இஸ்லாத்திற்குப் பிறகும் அன்னாரது பொருளாதாரம் வளமாக அமைந்தது. அவர்களுடைய பொருளாதாரம் நபியவர்களின் தஃவாவிற்கு, இலட்சியப் பணிக்கு மிகப் பெரும் துணையாக அமைந்தது. கதீஜா (ரழியல்லாஹூ அன்ஹா) அவர்கள் தனிப்பட்ட முறையில் அவர்களுடைய இலட்சியப் பணிக்கு துணை நின்றது மாத்திரமல்லாமல் அவர்களது பொருளாதாரம் கூட நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களுடைய தூதுத்துவப் பணிக்கு துணையாக இருந்தது.

### 2. ஸைனப் (ரழியல்லாஹூ அன்ஹா)

ஸைனப் (ரழியல்லாஹூ அன்ஹா) அவர்கள் கைத்தொழில் செய்து, தான் தயாரித்த பொருட்களை விற்று, அதன் மூலம் கிடைத்த வருமானத்தை அதிகம் தர்மம் செய்பவர்களாக இருந்தார்கள். தான் உழைத்ததை அதிகமதிகம் அடுத்தவர்களுக்குக் கொடுத்துதவும் பெண்ணாக அவர்கள் இருந்ததை வரலாற்றிலே காணலாம்.

## பெண்கள் தொழில் செய்தல்

## – இஸ்லாம் கூறும் அடிப்படைகள் –

**1. பெண்களின் இயல்பு பாதுகாக்கப்படல் வேண்டும்**

பெண்கள் எந்த விவகாரத்தில் ஈடுபடுவதாக இருந்தாலும் அவர்களின் இயல்பு, அவர்களுக்கே உரிய இயல்பு பாதுகாக்கப்படல் வேண்டும்; அவர்களின் பெண்மைக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படக் கூடாது; அவர்களின் பெண்மை நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கே உரிய இயல்பு, அவர்களின் சுபாவம், அவர்களின் தன்மை என்பன நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்பட வேண்டும். இது இஸ்லாம் கூறும் முதலாவது அடிப்படையாகும்.

**2. வீடு என்ற சாம்ராஜ்யத்தின் நிர்வாகம் பாதிக்கப்படக்கூடாது**

மற்றுமொரு மிக முக்கியமான, இஸ்லாம் வலியுறுத்தும் உண்மைதான் வீடு என்பது பெண்களின் ராஜ்ஜியம். அந்த ராஜ்ஜியத்தின் தலைவியாக இருப்பவள் பெண். ஆணின் துணைவியாக, குழந்தைகளின் தாயாக, வீடு என்ற சாம்ராஜ்ஜியத்தின் சொந்தக்காரியாக, நிருவாகியாக இருப்பது ஆணல்ல பெண்ணே. எனவே வீடு என்ற சாம்ராஜ்யத்தின் நிர்வாகம், பரிபாலனம் பாதிக்கப்படாமல் இருப்பது மிக முக்கியம். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நீண்ட ஒரு ஹதீஸிலே சொன்னார்கள்;

“நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகள். உங்கள் ஒவ்வொருவரின் பொறுப்புக்கள் பற்றியும் நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்…”

தொடர்ந்து கூறினார்கள்,

“ஒரு பெண் தன்னுடைய கணவனது வீட்டில் பொறுப்புதாரியாக இருக்கிறாள். அவளுடைய பொறுப்புகள் பற்றி நிச்சயமாக அவள் விசாரிக்கப்படுவாள்.” (அல்புகாரி, முஸ்லிம்)

எனவே வீடு பற்றி மறுமையில் நிச்சயமாக ஆணை விட பெண் விசாரிக்கப்படுவாள். வீட்டு விவகாரம், வீட்டின் நிர்வாகம், அதன் பரிபாலனம் பற்றி ஆணை விட பெண் விசாரிக்கப்படுவாள் என்பது மிக முக்கியமானது.

**3. மார்க்கம்– குடும்பம்– சமூகம் பாதிக்கப்படக்கூடாது**

இஸ்லாத்தை குடும்பம் சார்ந்த மார்க்கம் (Family Oriented Religion) என்பார்கள். இஸ்லாம் குதூகலமான சந்தோஷமான நிறைவான மனநிம்மதிமிக்க குடும்பங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதை இலக்காகக் கொண்ட ஒரு மார்க்கம். அதனை அடுத்ததாக இஸ்லாத்தை சமூகம் சார்ந்த மார்க்கம் (Community Oriented Religion) என்று சொல்வார்கள். உண்மையில் இவ்விரண்டும் இணைந்த ஒரு பரிபூரணமான மார்க்கம்தான் இஸ்லாம். இந்த இரண்டையும் முறையாகக் கையாள்வது ஒரு பெண்ணின் பொறுப்பாகும்.

## பெண்ணிலைவாதிகளின் வாதங்கள்

இன்று பெண்ணிலைவாதிகள் அல்லது நவீனத்துவவாதிகள் என்று அழைக்கப்படுகின்ற பெண்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் பெண்கள் தொழில் புரிவது தொடர்பான சில வாதங்களை முன்வைக்கின்றனர்.

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும்; சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று கோஷமிடுகின்றனர். தங்களின் இயல்பை மறந்து தாங்களும் ஆண்களைப் போல் அனைத்து விவகாரங்களிலும் ஈடுபட வேண்டும்; அது தமது உரிமை எனக் குரல்கொடுத்துக் கொண்டு அவற்றுக்கு சார்பான வாதங்களையும் அவர்கள் முன்வைக்கின்றனர்.

**1. பெண் தொழில் செய்வதற்காக கட்டாயம் வெளியே செல்ல வேண்டும்**

பெண்கள் சமூகத்தில் சம அந்தஸ்து உள்ளவர்கள்; சரி பாதி. அவள் வீட்டில் முடங்கிக் கிடப்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும். சமூகத்தில் குறைந்தபட்சம் 50 சதவீதமாக இருக்கும் பெண்கள் தொழில் செய்யாமல், உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடாமல் இருக்கின்றபோது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. பெண்கள் முடங்கியிருக்கும் போது இந்த நிலை உருவாகும் என்பது இவர்களின் வாதம்.

**2. குடும்பத்தின் நலன் பெண் தொழில் செய்வதை வேண்டி நிற்கின்றது**

குடும்ப நலனானது பெண் தொழில் செய்வதை வேண்டி நிற்கின்றது. பெண்கள் தொழில் செய்யாதபோது குடும்ப நலன் பாதிக்கப்படுகிறது. குடும்பத்தின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு பல விபரீதங்கள் ஏற்படுகின்றன. குடும்பத்தின் உணவு நிலை, கல்வி நிலை, போஷாக்கு மட்டுமல்லாமல் குடும்பத்தின் இன்னும் பல விடயங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே குடும்ப நலனானது பெண் தொழில் செய்வதை வலியுறுத்துகின்றது.

**3. பெண்ணின் நலன் அவள் தொழில் செய்வதை வேண்டி நிற்கின்றது**

பெண்ணின் நலன் அவள் தொழில் செய்வதை வேண்டி நிற்கின்றது. ஏனென்றால் அவள் வீட்டிலே முடங்கிக் கிடக்கின்ற போது அவளுடைய ஆளுமை விருத்தி (Personality Development) முழுமை பெறுவதில்லை.

அவள் வீட்டிற்கு வெளியே போனால்தான் அறிவு வளரும்; அனுபவம் வரும்; திறன்கள் வளரும். இவற்றிற்கூடாக ஆளுமை பெற்றவளாக அவள் மாறுவாள். எனவே பெண்ணுடைய நலன் அவள் தொழில் செய்வதை வேண்டி நிற்கின்றது.

### 4. தொழிலென்பது பெண்ணுக்கு ஓர் ஆயுதம்

தொழிலென்பது பெண்ணுக்கு ஓர் ஆயுதம்; அவளது கையிலிருக்கும் பாதுகாப்புக் கவசம். ஒரு பெண் வளர்ந்து வருகின்றபோது தந்தையை இழக்கலாம்; திருமணம் முடித்ததற்குப் பின்னால் திடீரென்று கணவன் விவாகரத்துப் பெறலாம். இப்படியான நிலையில் அவளுக்கு மிகப் பெரிய பாதுகாப்பு அரணாக, பாதுகாப்புக் கவசமாக, பாதுகாப்பு ஆயுதமாக அவளது தொழில், உழைப்பு இருக்கிறது; உழைப்புக்கு அவள் ஏற்படுத்திக் கொண்ட வழி இருக்கிறது. எனவே, பெண் தொழில் செய்வது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

ஒரு பெண் தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்குரிய நியாயங்களை பெண்ணிலைவாதிகள் மேற்குறித்தவாறு முதன்மைப்படுத்துகின்றனர். இந்த வாதங்களிலே சில நியாயங்களும் இல்லாமலில்லை. அதேநேரத்தில் மேலதிகமாக சில விளக்கங்களையும் நாம் சொல்ல வேண்டியும் இருக்கிறது.

# பெண்ணிலைவாதிகளின் வாதங்களுக்கான பதில்கள்

### 1. பெண் தொழில் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறாள்

இன்றைய உலக அமைப்பின்படி பெண் தொழில் பார்க்க பலபோது நிர்ப்பந்திக்கப்படுகின்றாள் என்பது கசப்பான உண்மையாகும். கிழக்கு உலகில் குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளில் பெண்கள் கட்டாயமாக தொழில் பார்க்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் அண்மைக் காலம் வரை இல்லாமலிருந்த போதிலும் மேற்குலக நாடுகளைப் பொறுத்தவரையில் பெண்கள் தொழில் பார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். தொழில் பார்க்காதபோது அவர்களால் தொடர்ந்தும் வாழ முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதை அவதானிக்க முடியுமாக உள்ளது.

சமத்துவம், சம வாய்ப்பு, சம அந்தஸ்து, ஆண்-பெண் வேறுபாடில்லாமல் இருசாராரும் சம வாய்ப்புகள், சம சந்தர்ப்பங்கள் பெற வேண்டும் என்ற கருத்து அங்கு பல

தசாப்தங்களாக வலியுறுத்தப்பட்டதன் விளைவாக ஆண்-பெண் என்ற பாகுபாடு மறக்கப்பட்டு அல்லது மறக்கடிக்கப்பட்டு மற்றொரு பால் இன்று மேற்குலகிலே உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது மூன்றாவது இனம் உருவாக்கப்பட்டுள்ளது; ஆணுமில்லாத பெண்ணுமில்லாத ஓர் இனம். எந்தளவுக்கெனில் தோற்றத்தில்கூட ஆண், பெண் என்று தெரியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய சம வாய்ப்பை அல்லது சம அந்தஸ்தை எதிர்பார்த்த பெண்கள் ஆண்களுக்கு சமமாக இன்று விரும்பியோ விரும்பாமலோ தொழிலுக்குப் போயாக வேண்டும். அவர்கள் உழைத்தேயாக வேண்டிய கட்டாய நிலை தோன்றியுள்ளது. மிகவும் இயல்பாக மேற்கில் இந்நிலை உருவாகியிருக்கிறது.

**2. குடும்ப, சமூகக் கட்டமைப்பு சிதைக்கப்படுகிறது**

பெண் நாட்டின் மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றிற்குப் பங்களிப்புச் செய்யச் சென்றதன் மோசமான விளைவுகளை இன்று உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

பொதுவாக பெண்கள் தொழில் செய்வதில் சமூக நலன் இருப்பதாக சொல்லப்படுகின்றது. உண்மை என்னவென்றால் பெண்கள் தங்களது வீட்டிலே தங்களுடைய பணியை செவ்வனே நிறைவேற்றுவதில்தான் ஆரோக்கியமான ஒரு சமூகம் உருவாகுவது தங்கியிருக்கிறது. ஆண்கள் ஆண்களுக்குரிய பணிகளை நிறைவேற்றுவது போல பெண்கள் பெண்களுக்குரிய பணிகளை குறிப்பாக, தங்களது ராஜ்ஜியமான வீட்டுப் பணிகளை செவ்வனே நிறைவேற்றுகின்றபோதுதான் எல்லோரும் எதிர்பார்க்கும் நிறைவான வாழ்க்கை, சந்தோஷமான குடும்ப வாழ்க்கை, ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கை, அமைதியான சமூக வாழ்க்கை உருவாகும் என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமான ஓர் அம்சம். மாறாக பெண்கள் தொழிலுக்குப் போவதால் இத்தகைய ஆரோக்கியமான குடும்பத்தை, சமூகத்தை சீரழிக்கும் சூழல் இன்று ஏற்பட்டுள்ளது.

**தொழிற்பிரிப்பு**

உலகில் தொழிற்பிரிப்பின் ஊடாக பொது உற்பத்தி (Production)களை அதிகரிக்கலாம் என்பது நியதி. எந்த அளவுக்கு தொழிற்பிரிப்பு நடக்கின்றதோ அந்த அளவிற்கு உற்பத்தி அதிகரிக்கும் என்பது பொருளியல் ரீதியான உண்மை. அந்த அடிப்படையில்தான் ஒரு வேலையை ஒருவர் மாத்திரம் செய்யாமல் அந்த வேலையை பலர் பிரித்துக் கொண்டு செய்கிறார்கள்.

**தெய்வீக ரீதியான தொழிற்பிரிப்பு**

அல்லாஹு தஆலா மனிதனைப் படைக்கும்போதே தெய்வீக ரீதியான ஒரு தொழிற்பிரிப்பை ஏற்படுத்தியிருக்கிறான். அவன் ஆணைப் படைத்து அவனது தன்மை, சுபாவம் என்பவற்றிற்கு ஏற்ப சில பொறுப்புக்களையும் பெண்ணைப் படைத்து அவளது சுபாவம், இயல்பு என்பவற்றிற்கு ஏற்ப சில பொறுப்புகளையும் கொடுத்திருக்கிறான். அல்லாஹ்வினுடைய தொழிற்பிரிப்புக்கு ஏற்ப அவை நடைபெற்றால் வாழ்க்கை வளமாக இருக்கும்; நிறைவாக இருக்கும்; சந்தோஷமாக இருக்கும்; சுகமாக இருக்கும்.

**ஆண் – பெண் சிறப்புத் தேர்ச்சி பாதிப்பு**

அல்லாஹு தஆலா ஆண்களுக்கு சில சிறப்புத் தேர்ச்சிகளைக் கொடுத்திருக்கிறான். பெண்களுக்கும் சில சிறப்புத் தேர்ச்சிகளைக் கொடுத்திருக்கிறான். சிறப்புத் தேர்ச்சி என்றால் ஆண்களுக்கு என்று சில திறன்கள், ஆற்றல்களையும்

பெண்களுக்கு என்று சில திறன்கள், ஆற்றல்களையும் வெவ்வேறாக மாத்திரமன்றி அவர்களுக்கென்றே தனித்துவமாகவும் கொடுத்திருக்கின்றான்.

**பெண்ணின் சிறப்புத் தேர்ச்சி**

தாய்மை, குழந்தை வளர்ப்பு, வீட்டு நிர்வாகம், Parenting என்ற இந்த அம்சங்கள்தான் பெண்ணுக்கு உரிய, இறைவன் கொடுத்துள்ள இயல்பான சிறப்புத் திறமைகள்.

உதாரணமாக ஒருவருக்கு விஞ்ஞான ரீதியாக (Scientifically), பௌதிக ரீதியான (Physically) 60 கிலோதான் தூக்க முடியும் என்றிருக்கும்போது, அவர் 100 கிலோவை தூக்க முயல்கிறார் என்றால் அவரால் அதனைத் தூக்க முடியும், தூக்க முடியாது என்பதல்ல பிரச்சினை. அதனை ஒருவர் தூக்கி முதுகில் வைக்கலாம் அல்லது வேறுவகையில் தூக்கலாம். அவ்வாறு அவர் தூக்கினால் அதன் பின்விளைவுகளை அவர் சுமக்க வேண்டியிருக்கும்.

இதேபோல ஆணின் வேலையைப் பெண் செய்யலாம். பெண்கள் வாகனம் ஓட்டலாம்; விமானமும் ஓட்டலாம்; அவர்களால் இயலாது என்றில்லை. இது ஒரு சாதனையாகக் கருதப்பட்டது. இன்று இவற்றின் பின்விளைவுகளை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**விதிவிலக்கு** (Exception)

விதிகள் இருப்பது போலவே விதிவிலக்குகளும் இருக்கும். விதிவிலக்கு இருக்கும் என்பதும் ஒரு விதி. ஆனால் பெரும்பான்மை (Majority) எப்படியிருக்கிறது என்பதைத்தான் பார்க்க வேண்டும். இதேபோல் சில ஆண்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு குசினியில்தான் இருக்க வேண்டும் என்று ஆசை!? இதை வைத்து அவருக்கு இருக்க இயலுமென்றால் ஏன் இவருக்கு இருக்க முடியாது என்று மற்றைய ஆணைக் காட்டிக் கேட்க முடியாது.

இது விதிவிலக்கு (Exception). சில பெண்களுக்கு ஆண்களைப் போல ஆண்மைக்குணம் இருக்கும். அதேபோல் சில ஆண்களுக்குப் பெண்ணைக்குணம் வருவது இயல்பானது. இதனை விதியாக மாற்றி பெண்களாலும் ஆண்களுக்குச் சமமாக தொழில் செய்ய முடியும் எனக் கருதுவது பிழையானதாகும்.

**3. பெண்ணின் நலம் பாதிக்கப்படல்**

“அவனே உங்களை ஒரே ஆன்மாவிலிருந்து படைத்தான். அவர்கள் அமைதி காண வேண்டும் என்பதற்காக அவர்களிலிருந்தே அவர்களது துணைவியையும் படைத்தான்.”
(7: 189)

ஆண் அமைதி காணும் இடம்தான் பெண். பெண்ணினுடைய அடிப்படையான மிக முக்கியமான கடமை அல்லது பணி என்னவென்றால் ஓர் ஆணுக்கு அமைதியைக் கொடுப்பது. ஆணுக்கு அமைதியைக் கொடுக்கும் இடம்தான் பெண். அல்குர்ஆன், “தஸ்குனு இலைஹா” என்று சொல்கிறது. திருமணத்தினுடைய, குடும்பத்தினுடைய பிரதான நோக்கம் ஆண்கள் பெண்ணிலே அமைதியை, நிம்மதியைப் பெறுவதாகும்.

தொழில் பார்த்து களைப்படைந்து தனக்கு அமைதியைத் தருவது யாரென்ற ஏக்கத்தோடு வருகின்ற பெண், எங்கே ஆணுக்கு அமைதியைக் கொடுக்கும் இடமாக இருக்க முடியும்! அவளே சோர்வடைந்து அமைதியைத் தேடித்தான் வருகிறாள். ‘‘அவர் எனக்கு ஒரு தேநீர் ஊற்றித் தர மாட்டாரா…?’’, ‘‘என்னுடன் இரக்கமாகப் பேச மாட்டாரா…?’’ என்ற ஏக்கத்துடன் வரும் அந்தப் பெண் அவளுக்குப் பின்னர் அல்லது

முன்னர் வீட்டிற்கு வந்த ஆணுக்கு- அவளது கணவனுக்கு எப்படி அமைதியைப் பெற்றுக் கொடுக்கப் போகிறாள்!

தனக்கே அமைதி இல்லாதபோது அவள் எப்படி கணவனுக்கு அமைதியைக் கொடுப்பாள்! தாய், தந்தைக்கு எப்படி அமைதியைக் கொடுப்பாள்!! வீட்டிலிருக்கும் பிள்ளைகளுக்கு எப்படி அமைதியைக் கொடுப்பாள்!!!

'எல்லோரும் என்னையல்லவா பார்க்க வேண்டும்! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்துவிட்டு வருகிறேன்...!!' என்றுதான் அவள் சிந்திப்பாள்.

அரபியில் ஒரு பழமொழி இருக்கிறது.

''ஒன்றை இழந்தவனால் அதனை பிறருக்கு கொடுக்க முடியாது.''

தன்னிடம் இல்லாததை ஒருவனால் மற்றவனுக்குக் கொடுக்க முடியாது. தொழில் செய்யும் ஒரு பெண் களைப்படைந்து அமைதியை இழந்து மனஅழுத்தத்தில் (Stress) இருக்கும் நேரம் அவள் எப்படி கணவனுக்கு அமைதியை வழங்க முடியும்!

மாறாக, அப்போது கணவனிடம் அவர் தன்னோடு கொஞ்சம் இரக்கமாகப் பேச வேண்டும் என்றுதானே அவள் எதிர்பார்ப்பாள். இந்த நினைப்பு, எதிர்பார்ப்பு ஒவ்வொருவருக்கும் வெவ்வொரு விதமாக வரும். அவர்களது நாகரிகத்தைப் பொறுத்து, படிப்பைப் பொறுத்து வெவ்வேறு வடிவங்களில் வெளிவரும்.

### 4. தொழில் ஓர் ஆயுதமா?

தொழில் ஓர் ஆயுதம் என்று சொல்கிறார்கள். மேற்குலகைப் பொறுத்தவரையில் தொழில் பெண்ணினுடைய ஆயுதம்தான். ஆனால், தூய இஸ்லாமிய அடிப்படைகள் பேணி நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு சமூகத்தில் தொழில் என்பது பெண்ணினுடைய ஆயுதமல்ல. ஏனென்றால் பெண்ணுக்கு தொழில் செய்ய வேண்டிய தேவையே அங்கு இல்லை. உழைக்க வேண்டிய, சம்பாதிக்க வேண்டிய எந்தவொரு அவசியமும் தூய முஸ்லிம் சமூகத்தில் வாழ்கின்ற ஒரு பெண்ணுக்கு எந்த நிலையிலும் தோன்றுவதற்கு இடமில்லை.

### இஸ்லாத்தில் பெண்- அதிதி (Guest)

பெண்ணைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பும் சமூகத்தை சார்ந்தது. சமூகத்திலுள்ள ஆண்களைச் சார்ந்தது. இன்னும் தெளிவாகச் சொன்னால் பெண் என்பவள் இஸ்லாமிய சமூகத்தில் அதிதி(Guest)யுடைய நிலையில் வைத்து நோக்கப்படுகின்றாள். பெண்ணைக் கவனிக்க சட்ட (Legally) ரீதியாக கடப்பாடுள்ளவர்கள் ஆண்கள்.

### பெண்ணைக் கவனிக்க சட்ட (Legally) ரீதியாக கடப்பாடுள்ளவர்கள்

#### 1. தந்தை

பெண்ணைக் கவனிக்க சட்ட ரீதியான கடப்பாடுள்ளவர்கள் வரிசையில் முதலாமவர் தந்தை. குழந்தையாக இருக்கும் போது ஒரு பெண்ணை கண்டிப்பாக, கட்டாயமாக கவனிக்க வேண்டியது தந்தை. அவர், ''நான் உன்னை எவ்வளவு கஷ்டப்பட்டுப் பார்க்கிறேன்'' என்று பெருமை பேச முடியாது. அல்லது ''உன்னை எனக்குக் கவனிக்க முடியாது'' என்று கூற முடியாது. ஏனென்றால் அது அவருடைய கடமை (Duty). பெண்ணைக் கவனிக்க வேண்டிய முதல் கடப்பாடு உள்ளவர் தந்தை.

**2. கணவன்**

திருமணத்திற்குப் பிறகு அவளை கணவன் கவனிக்க வேண்டும். அது அவருடைய கடமை. இது பற்றி அவர் பெருமையடிக்க முடியாது; எனக்கு உன்னைக் கவனிக்க முடியாது என்று கூற முடியாது. ஏனெனில் பெண்ணின் முழு வேலையே வீட்டின் நிர்வாகத்தைப் பார்ப்பதுதான். கணவனின் கடமை அவளைக் கவனிப்பதுதான்.

**3. பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்**

அடுத்தது தாய் என்ற ரீதியில் அவளது பிள்ளைகள் கவனிக்க வேண்டும். பிறகு சகோதரர்கள் கவனிக்க வேண்டும். பின்னர் உறவினர்கள் கவனிக்க வேண்டும்.

ஒரு பெண்ணை நிர்க்கதியாக சமூகத்தில் விடமுடியாது. அவள் எப்போதும் கடைசி வரைக்கும் அதிதி(Guest)யாகத்தான் இருப்பாள். இது இஸ்லாம் உத்தரவாதப்படுத்தும் அடிப்படையான பெண்ணுக்குள்ள உரிமை.

எனவே தொழில் செய்வது பெண்களுக்கு ஆயுதம் என்ற வாதம் மேற்குலகிற்குப் பொருத்தமானது. அவர்கள் பேசிய சமத்துவம், சம வாய்ப்பு மற்றும் பால் பற்றிய பார்வை (Gender Perspective) என்பவற்றின் விளைவாக இந்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் அங்கு கணவன்-மனைவி என்பதில்லை; வாழ்க்கைத் துணை (Life Partner) என்றுதான் நோக்கப்படுகிறது. அங்கு ஆண்கள் பெண்களின் பொறுப்பாளர்கள் என்பதெல்லாம் கிடையாது.

அங்கு தந்தை மகளைக் கவனிக்க வேண்டும்; கணவன் மனைவியைக் கவனிக்க வேண்டும்; சகோதரர்கள் சகோதரிகளைப் பார்க்க வேண்டும் என்ற நிலை இல்லை. எனவே மேற்கில் பெண் வாழ வேண்டும் என்றிருந்தால் கட்டாயம் தொழில் என்ற ஆயுதத்தைக் கையில் எடுத்தாக வேண்டும்.

எனினும் இஸ்லாம் ஒரு பெண்ணைக் கவனிக்க அவளது தந்தை, கணவன், மகன், சகோதரன் போன்றோரை சட்ட ரீதியாக கடமைப்பாடுள்ளவர்களாக ஏற்படுத்தி வைத்திருப்பதனால் பெண் அதிதியுடைய நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றாள்.

இவ்வாறு பெண்கள் உழைக்க வேண்டிய தேவையே இல்லை எனும் அளவுக்கு அவளுக்கு இஸ்லாம் பொருளாதார ரீதியான ஏற்பாடுகளை செய்து வைத்துள்ளது. ஆனால் மேற்குலகைப் பொறுத்தவரை இந்த நிலை இல்லை. இதனால்தான் மேற்கிலே பெண்கள் தொழில் செய்வதென்பதைவிட அது அவர்களுக்கு நிர்ப்பந்தமானதாக மாறிவிட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## பெண் வீட்டிற்கு வெளியே வேலைக்குச் செல்வதன் பாதகமான விளைவுகள்

பெண் வீட்டிற்கு வெளியே தொழில் புரியச் செல்வதால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள்.

**1. பெண்ணிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்**

*(அ) அவளது பெண்மையை, மென்மையை இழத்தல்.*

*(ஆ) வீட்டு வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சீரழிவுகள்.*

*(இ) உடல், உள ரீதியான பாதிப்புகள்.*

தொழில் செய்யப் போகின்ற பெண்கள் எவ்வாறு அவர்களது பெண்மையை இழக்கிறார்கள்; மென்மையை இழக்கிறார்கள்; எத்தகைய சீரழிவுகளுக்கு முகங்கொடுக்கிறார்கள்; எத்தகைய உடல், உள ரீதியான பாதிப்புகளுக்கு உட்படுகிறார்கள் என்பன பற்றி நிறைய ஆய்வுகள் வெளிவந்திருக்கின்றன.

வீட்டில் குழந்தைகளுடனும் கணவனுடனும் அன்பாகவும் பாசமாகவும் மென்மையாகவும் இருக்க வேண்டிய பெண் தொழிலுக்குச் சென்று அங்கு மனஅழுத்தங்களுக்கு ஆளாகி பெண்மை, மென்மையை இழந்து விடுகின்றாள்.

அதுமாத்திரமன்றி பெண்கள் தொழில் பார்க்க வீட்டுக்கு வெளியே செல்வதால் குடும்ப அலகு ஒழுங்காகக் கவனிக்கப்படாமல் கணவன்-மனைவி-குழந்தை என்ற உறவு சீர்குலைகிறது. அவர்களுக்கிடையிலான உள்ளார்ந்த இணைப்பு இல்லாமற் போகிறது. சிலபோது பிள்ளைகள் நெறிதவறிப் போவதற்கும் கணவன்-மனைவிக்கிடையிலான குடும்பத் தகராறுகள் இடம்பெறுவதற்கும் மனைவி குடும்பத்தைப் பார்க்காது தொழிலுக்குப் போவது காரணமாக அமையலாம்.

வீட்டில் இருந்து குழந்தைகளுக்கு அன்பு ஊட்டி வளர்க்க வேண்டிய தாய் ஓய்வில்லாமல் வேலைக்குப் போவதால் பிள்ளைகள் முறையாகவும் கட்டுப்பாடாகவும் வளர்க்கப்படாமல் பல சீர்கேடுகள் இடம்பெறுவதை சமூகத்தில் நாம் பார்க்கிறோம்.

**2. கணவருக்கு ஏற்படும் பாதகங்கள்**

(அ) கணவன் பக்கமாக வரும் முறைப்பாடுகள்

ஆணும் பெண்ணும் தொழிலுக்குச் செல்கின்றபோது கணவன் பக்கமாக பல முறைப்பாடுகள் (Complains) வருகின்றன. அவர்களுக்கிடையில் எவ்வளவு புரிந்துணர்வு (Understanding) இருந்தாலும் இத்தகைய பிரச்சினைகள் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

உதாரணமாக, தொழிலுக்குப் போகின்ற பெண்கள் வேலைப்பளுவின் காரணமாக கணவனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பலவற்றில் குறைவிடலாம். எனவே

கணவன் தனக்கு மனைவி நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றவில்லை என்ற முறைப்பாட்டை முன்வைக்கலாம்.

(ஆ) தலைமைத்துவப் பிரச்சினை (Leadership Crisis)

அடுத்ததாக வீட்டிலே தலைமைத்துவப் பிரச்சினை (Leadership Crisis) உருவாகிறது. தலைமைத்துவப் பிடியை தான் இழப்பதாக ஆண் உணருவான்.

உதாரணமாக ஒரு பெண் பாடசாலையில் அதிபராக இருக்கிறாள். இவர் யாருக்கு அதிபர்? பாடசாலையிலுள்ள மாணவ-மாணவியருக்கு அதிபர்; பாடசாலையில் தனக்குக் கீழ் வேலை செய்யும் ஆசிரிய-ஆசிரியைகளுக்கு அதிபர். இந்த மனப்பாங்கு (Mentality) இவருக்குள் வளர்ந்து வீட்டுக்கு வந்து கணவருக்கும் அதிபராக முனைவாள். விளைவு?

தலைவரின் வேலை என்ன? எப்போதும் கட்டளை (Order)யிடுவது, அறிவுறுத்தல் (Intruction) வழங்குவது. சரி பிழை பார்ப்பது. அவள் வீட்டிற்கு வந்தாலும் திடீர் என்று அந்த மனநிலை (Mindset)யை மாற்றுவதென்பதும் கடினம்.

வீட்டுக்கு வந்து பிள்ளைகளுக்கு அதிபரானால் பரவாயில்லை. கணவருக்கும் சேர்த்து அதிபராக முனைந்தால் என்ன நடக்கும்? விளைவுகள் மோசம். அதிலும் இருவரும் தொழில் பார்க்கும்போது சம்பள வேறுபாடு இருந்தால் அதுவும் உள ரீதியான நிறையப் பிரச்சினைகளை உருவாக்கும். புரிந்துணர்வு இருந்தாலும் அது உள ரீதியான நிறைய சிக்கல்களைத் தோற்றுவிக்கும். இதுவும் கணவனுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களில் ஒன்றாகும்.

### 3. குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள்

அன்பும் அரவணைப்பும் பராமரிப்பும் மட்டுமல்ல, தாயினுடைய உடல் ரீதியான இருப்பும் (Physical Presence) குழந்தைகளுக்கு அத்தியவசியத் தேவை. எத்தனை வீட்டுப் பணிப்பெண்கள் இருந்தாலும் ஒரு குழந்தைக்கு அல்லாஹ் அமைத்து வைத்திருக்கின்ற ஒழுங்கு தாயினுடைய உடல் ரீதியான இருப்பு, தாயின் பார்வை, தாயின் வார்த்தைகள், தாயினுடைய பிடி, அரவணைப்பு என்பவைதான் அந்தக் குழந்தையை உடல் ரீதியாக, உள ரீதியாக வளர்க்கிறது. அந்தக் குழந்தையினுடைய உடல் ரீதியான, உள ரீதியான ஆரோக்கியத்திற்குப் பிரதான காரணியாக தாயினுடைய இருப்பு இருக்கிறது. தொழில் செய்கின்ற ஒரு பெண் தனது குழந்தைகளுக்கு இதனை எப்படி ஈடு செய்வாள்?

### 4. ஆண் இனத்திற்கே ஏற்படும் பாதிப்பு

இன்று உலகில் மிக முக்கியமான பிரச்சினை தொழிலில்லாப் பிரச்சினை. பெண்கள் தொழிற் சந்தைக்கு வந்ததன் விளைவாக ஆண்களுக்குத் தொழில் இல்லாமல் போய்விட்டது. ஆண்களுக்குத் தொழில் இல்லாமல் போவதற்கான காரணங்கள் இரண்டு.

ஒன்று, இயந்திர மயமான வாழ்க்கை.

மற்றது, பெண்கள் தொழிலுக்குப் செல்லுதல்.

எனவே, பெண்ணும் இயந்திரமும் தொழிற் சந்தையில் நுழைந்ததன் விளைவாக தொழிலுக்கு உரிமையுள்ள ஆணுக்கு தொழிற் சந்தையில் தொழில் இல்லாமல் போய்விட்டது. இது பொருளாதாரப் பிரச்சினையாக இன்று உலகில் மாறியிக்கிறது.

### 5. தொழிலுக்கு ஏற்படும் பாதிப்பு

பெண்கள் தொழில் பார்ப்பதன் விளைவு உலகத்தில் தொழில்துறை மிக பயங்கரமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் தொழில் பார்ப்பது என்பது ஆண்களைப் போல்

பெண்களுக்கு இயலுமானதல்ல. இயலாத வேலையைச் செய்யப்போய் தொழில்துறை பாதிக்கப்பட்டுள்ளது. தொழில் நாட்களில் அதிக விடுமுறை எடுக்கப்படுகிறது. இதனால் தொழிற்துறை மிக மோசமாகப் பாதிக்கப்படுகிது.

பெண்களுக்கு நிறைய உபாதைகள் இருக்கின்றன. அல்லாஹ் இவ்வாறுதான் பெண்களைப் படைத்துள்ளான். எனவேதான் அவர்களுக்கு மென்மையான(Soft) வேலைகளைக் கொடுத்துள்ளான். அவர்களது இயல்பு, சுபாவம், உடல்நிலை என்பவற்றிற்கு ஏற்ப அவற்றைக் கொடுத்துள்ளான். விரும்பியோ விரும்பாமலோ பெண்களின் உற்பத்தி (Production) ஒப்பீட்டு ரீதியில் குறையும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு ஆசிரியை எடுக்கும் விடுமுறையைப் பாருங்கள். 200,000 ஆசிரிய, ஆசிரியைகளுள் 40,000 பேர் தினமும் விடுமுறை. வருடத்தில் 180- 200 நாட்கள்தான் பாடசாலை நாட்கள். வருடாந்தம் 41நாட்கள் விடுமுறை பெறலாம். முதல் பிள்ளைக்கு 84 நாட்கள் விடுமுறை. 2வது பிள்ளைக்கு 84 நாட்கள் விடுமுறை. 3வது பிள்ளைக்கு 42 நாட்கள் விடுமுறை. கணவன் மரணித்தால் இத்தாவிற்கு விடுமுறை. இதுபோக மேலதிகமாக 03 மாதங்கள் விடுமுறை எடுக்கலாம். மேலும் அரைநாள் விடுமுறை எடுக்கலாம். இப்படி விடுமுறை எடுத்தால் பெண் என்ன விளைவை (Output) கொடுக்கிறாள்?

உலகத்தில் அதிகமான விடுமுறை வழங்கும் நாடுகளின் பட்டியலில் 2வது இடம் இலங்கை. முதலாவது பாகிஸ்தான்; மூன்றாவது பங்களாதேஷ். தொழிலில் ஏற்படும் பாதிப்புகள் பற்றி கண்டிப்பாக சிந்திக்க வேண்டும்.

### 6. பண்பாட்டு ரீதியான பாதிப்புக்கள்

அடுத்த பிரச்சினை பண்பாட்டுப் பிரச்சினை; ஒழுக்கப் பிரச்சினைகள். பெண்களுக்கே உரிய வெட்க சுபாவத்தை இழத்தல். தொழிலுக்குப் போகும் போது ஆரம்பத்தில் வெட்கம், கூச்சம் இருக்கும். பின்னர் சென்று பேசிப் பழகி காலப்போக்கில் வெட்க சுபாவத்தை பெண்கள் இழப்பர். ஆரம்பத்தில் ஆண்களுக்கும் தன்மான உணர்வு இருக்கும். பிறகு குறைவடைந்து செல்லும்.

உதாரணமாக மனைவி தொழிலுக்குச் செல்கிறாள். அவள் தொழில் செய்யுமிடத்தில் அந்நிய ஆடவருடன் சகஜமாகப் பழக வேண்டி வரும். இதனைப் பார்த்து ஆரம்பத்தில் ரோஷம் வரும்; கோபம் வரும். மனைவியுடன் முரண்படுவார். பின்னர் அவருக்கும் இதெல்லாம் பழகிவிடும்.

இதெல்லாம் Exception norms ஆக மாறிவிட்டது. பொருளாதாரப் பிரச்சினைக்கு முன்னால் இதெல்லாம் பிரச்சினையே அல்ல என்று நோக்கப்படுகிறது.

### 7. சமூக வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சினைகள்

இறை நியதிகளை மீறுவது, இயற்கை நியதிகளை மீறுவது. பகலை இரவாக்கினால் அல்லது இரவைப் பகலாக்கினால் எவ்வளவு பிரச்சினைகள் வரும். அதே போலத்தான் பெண்கள் தாம் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றாமல் ஆண்களின் வேலைகளைச் செய்யப் போய் அதனையும் செய்ய முடியாமல் தமது வேலைகளையும் செய்ய முடியாமல் விடுவதால், ஆண்-பெண் என்ற ரீதியில் அவர்களது பணிப் பிரிப்பை பின்பற்றாததால் சமூக ஒழுங்க சீர்கெடும்.

## பெண்கள் தொழில் புரிய அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்கள்

இவையெல்லாம் கடந்த நிலையில் ஒரு பெண் தொழில் பார்க்க விரும்புகின்றாள்; தொழில் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் என்றால் அப்போது அவள் தொழில் புரிய அனுமதிக்கப்படுவாள். ஏலவே நாம் கூறிய விடயங்களை வைத்துப் பார்க்கும்போது பெண்கள் தொழில் பார்க்க முடியாது என்ற நிலைப்பாட்டிற்கு வரக்கூடியதாக இருக்கும். ஆனால் பெண்கள் இவற்றையெல்லாம் கவனத்திற் கொண்டு அதற்குப் பின்னரும் தொழில் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அவை:

### 1. தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம்

பெண் தொழில் செய்வது ஷரீஅத்தில் தடைசெய்யப்பட்டதல்ல. மட்டுமல்ல சிலபோது தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம். சிலபோது தொழில் செய்யுமாறு ஷரீஅத் கட்டளையிடும். இவ்வாறு தொழில் செய்யும்படி வேண்டப்படும் கட்டங்களும் உண்டு.

உதாரணமாக வருமானம் குறைந்த குடும்பத்தை சேர்ந்த பெண், குடும்பத்தில் பயங்கர வறுமை, பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில் செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தால் அவள் தொழிலுக்குப் போக வேண்டும். அதேபோல் விதவை-கவனிப்பார் யாருமில்லை என்ற நிலையில் அவள் தொழில் செய்வதற்கு இஸ்லாம் அனுமதிக்கிறது. மேலும் விவாகரத்து செய்யப்பட்ட ஒரு பெண், மணமுடிக்காத-கவனிப்பாரற்ற ஒரு பெண் ஆகியோர் நிர்ப்பந்தம் காரணமாக தொழில் செய்ய அனுமதிக்கப்படுவர்.

### 2. இஸ்லாமிய அடிப்படைகள் நடைமுறையிலில்லாத சமூகமாக இருத்தல்

இஸ்லாமிய அடிப்படைகள் நடைமுறையிலில்லாத சமூகத்தில் ஒரு பெண் தொழில் செய்ய நிர்ப்பந்திக்கப்படலாம். சமூகம் இலட்சியவாத இஸ்லாமிய சமூகமாக இருந்தால் அங்கு பெண்கள் கஷ்டப்பட வேண்டியிருக்காது. அவ்வாறு இல்லாதபோது பெண்கள் தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

### 3. சமூகத்தின் தேவை, நலன்

சமூகத்தினுடைய நன்மை, சமய நன்மை, சன்மார்க்க நலன் என்பவற்றுக்காக அவர்கள் விரும்பாதபோது கூட பெண்களில் சிலர் தொழில் பார்க்க வேண்டியிருக்கிறது.

உதாரணம் பெண் மருத்துவர்கள், பெண் தாதிமார்கள், பெண்கள் தொடர்பான பிரத்தியேகமான விவகாரங்களைக் கவனிக்க வேண்டியவர்கள் பெண்களாகத்தான் இருக்க வேண்டும். எமது சமூகத்திற்கு நிறைய பெண் மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள்; தாதிமார்கள் தேவைப்படுகிறார்கள்; பெண்கள் தொடர்பான விவகாரங்களைக் கவனிக்க

வேண்டியவர்கள் தேவைப்படுகிறார்கள்; பெண்களுக்கு அறிவூட்டுவதற்கான ஆசிரியைகள் தேவைப்படுகிறார்கள். இந்த நோக்கோடு, இந்த இலட்சியத்தோடு பெண்கள் தொழில் செய்ய வேண்டிய கட்டாயம் வரும்; ஷரீஆ அதனை வேண்டி நிற்கும்.

**4. சமூகத்தில் தொழிலாளர் பற்றாக்குறை**

சிலபோது விதிவிலக்காக சமூகத்தில் தொழிலாளர் பற்றாக்குறை நிலவும் ஒரு நிலை உருவாகலாம். அந்த நேரத்தில் பெண்கள் அந்த இடத்தை நிரப்பக் கடமைப்படுவார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில் பெண்கள் தொழிலுக்குச் செல்வதை ஷரீஆ அனுமதிக்கிறது.

# தொழிலுக்குச் செல்கின்ற பெண்கள் பேண வேண்டிய நிபந்தனைகள்

பெற்றோர், மனைவி, குழந்தைகளைக் கவனிக்க வேண்டும் என்று இஸ்லாம் ஆண்கள் மீது பல கடமைகளை விதியாக்கியுள்ளது போல பெண்களும் உழைத்து அவர்கள் வாழ்வது மட்டுமல்லாமல் மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டும் என்று கடமையாக்கவில்லை. ஆனாலும் நிர்ப்பந்தமான நிலையில் ஒரு பெண் தொழிலுக்குப் போகின்றாள் என்றால் அவள் நினைத்தவாறு அதனைச் செய்ய முடியாது. மாறாக அவள் தொழில் செய்வதாக இருந்தாலும் எத்தகைய தொழில்களைச் செய்ய வேண்டும், அவ்வாறு செய்யும் போது எத்தகைய நிபந்தனைகளைப் பேண வேண்டும் என்று இஸ்லாம் எமக்குக் கற்றுத் தருகிறது. இஸ்லாம் பெண்கள் தொழில் செய்வதைத் தடுக்காத போதும் தொழில் செய்வதாயின் பேண வேண்டிய நிபந்தனைகளை - வரையறைகளை நிர்ணயித்துள்ளது.

**1. ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்ட தொழிலாக இருத்தல்**

முதலாவது நிபந்தனை ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்ட தொழிலாக இருத்தல் வேண்டும். உதாரணமாக ஒரு பெண் ஒரு கிளப்பில் (Club) வேலை செய்தல், ஒரு ஹராமான உழைப்பில் ஈடுபட்டிருக்கும் இடத்தில் வேலை செய்தல், வட்டி தொழில் நடைபெறும் இடத்தில் வேலை செய்தல், வட்டி தொடர்பான கொடுக்கல்- வாங்கலில் ஈடுபடும் நிறுவனத்தில் வேலை செய்தல் போன்ற அனைத்தும் ஹராம் ஆகும்.

**2. தொழிலுக்குச் செல்லும்போது ஷரீஆ வரம்புகளைப் பேணுதல்**

தொழிலுக்குப் போகின்றபோது நடை, உடை, பாவணை அனைத்திலும் பெண்ணுக்குரிய இஸ்லாமிய வரையறைகளைப் பேணுவது, ஒழுக்க விழுமியங்களைப் பேணுவது அவசியம். செய்யும் தொழில் ஹலாலான தொழிலாக -ஷரீஆவில் அனுமதிக்கப்பட்ட தொழிலாக- இருந்தாலும் பெண்ணுக்கே உரிய ஷரீஆ வரம்புகளைப் பேணுதல் அவசியம்.

உதாரணமாக ஒரு பெண் நிறுவனத்தில் வேலை செய்கின்றாள். ஹலாலான கொடுக்கல்- வாங்கலில் ஈடுபடுகின்ற ஒரு கம்பனி. ஆனால் அந்தக் கம்பனியிலுள்ள ஆண் முகாமையாளருக்கு Personal Secretary ஆக பணி புரிதல். இவ்வாறு பணிபுரியும்போது அவருடன் தனியாக அவருடைய அறையில் இருக்கின்ற நிலை வருகின்றது. இது ஹராம். இந்தத் தொழில் அனுமதிக்கப்பட மாட்டாது.

மதுபானம் பரிமாறல், எயார் லைன்ஸில் மதுபானம் பரிமாறுகின்றனர் பெண்கள். அரபு நாடுகளை சேர்ந்த முஸ்லிம் பெண்கள்கூட சில எயார் லைன்ஸில் இத்தகைய வேலை செய்கின்றனர். இது ஹராம். அதேபோல தொழிலுக்குச் செல்லும் பெண்கள் உடை வரையறைகளைப் பேண வேண்டும்; ஏனைய வரையறைகள் பேணப்பட வேண்டும். அதேபோல் இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்கள் பேணப்பட வேண்டும்.

**3. செய்யும் தொழில் அடிப்படைக் கடமைகளுக்கு தடையில்லாமல் இருத்தல் வேண்டும்**

பெண்ணின் முதலாவது அடிப்படைப் பணி குழந்தை வளர்ப்பு. இந்தப் பணிக்கு தடையாக அந்தத் தொழில் இருக்கக் கூடாது. தனது குழந்தைகள் மீது அன்பு காட்ட, பராமரிக்க, நேரத்தை, காலத்தை கொடுக்கத் தடையாக தான் பார்க்கும் தொழில் அமையக் கூடாது.

மனைவி கணவனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள், குழந்தைகளுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள், பெற்றோருக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் வீட்டுப் பொறுப்புக்கள் ஆகியவற்றிற்கு தடையில்லாத வண்ணம் செய்யும் தொழில் அமைதல் வேண்டும்.

## தொழில் செய்யும் பெண்களுக்கு

## சமூகம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்

நிர்ப்பந்தமான நிலைகளில் பெண்கள் தொழில் புரிய அனுமதிக்கப்படுவர் என்று பார்த்தோம். ஆனாலும் இஸ்லாம் வகுத்த நிபந்தனைகளைப் பேணிய நிலையில் அவள் தொழில் செய்யப் போகலாம். அவ்வாறு போகின்ற பெண்ணுக்கு முஸ்லிம் சமூகம் நிறைவேற்ற வேண்டிய பல கடமைகள் இருக்கின்றன. ஏனெனில் பெண் பலவீனமானவள். எனவே அவளுக்கு சமூகம் தொழில் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும். தொழிலுக்கு மாத்திரமல்லாமல் தொழிலோடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

**1. பொருத்தமான தொழில்களை அவர்களுக்கு அமைத்துக் கொடுத்தல்**

பெற்றோர், சகோதரர்கள், சமூகத்தில் உள்ளவர்கள் பெண்களுக்கு மிகப் பொருத்தமான அவர்களது சுபாவத்திற்கும் இயல்பிற்கும் பொருத்தமான அவர்களுடைய ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் பேணுவதற்கு உகந்த விதத்தில் தொழில்களை அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

**2. பெண்களுக்கான தனியான நிறுவனங்கள் அமைத்தல்**

பெண்களுக்கான தனியான பாடசாலை, உயர் கலா நிலையங்கள், பெண்களுக்கான பல்கலைக் கழகங்கள், பெண்களுக்கான வியாபார நிலையங்கள் என்று பெண்களுக்கென்று தனியான நிறுவனங்களை, பிரிவுகளை (Department) அமைத்துக் கொடுத்துவிட்டால் சுதந்திரமாக தங்களுடைய பணிகளை செய்யக்கூடியதாக இருக்கும். இது தொழில் செய்யும் பெண்கள்பால் சமூகத்திற்குள்ள முக்கியமான கடமைகள்.

**3. பிரத்தியேக போக்குவரத்து ஏற்பாடுகள்**

தொழில் செய்யும் பெண்களுக்காக பிரத்தியேக ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். விஷேடமாக பெண்களுக்கென்று விஷேட போக்குவரத்து ஏற்பாடுகள். இன்று தொழிலுக்குப் போகும் பெண்கள் செய்யும் தொழில் ஹலாலாக இருக்கலாம். அவர்கள் அணியும் ஆடை இஸ்லாமிய ஆடையாக இருக்கலாம். அவர்கள் தொழில் செய்யும் இடத்தில் இஸ்லாமிய வரம்புகளைப் பேணலாம். ஆனால் போக்குவரத்தின்போது அவர்கள் எதிர்நோக்குகின்ற ஷரீஆ ரீதியான பிரச்சினைகள் மிகப் பயங்கரமானவை. அந்த ஒரு பிரச்சினைக்காகவே அவர்கள் தொழில் செய்யப் போவது ஹராமானது என்று கூட நாம் சொல்லலாம்.

இன்றைய பொதுசன போக்குவரத்தைப் (Public Transport) பொறுத்தவரையில் நிலைமை மிக மோசமாக உள்ளது. எனவே பெண்களுக்கு ஒரு நாட்டில், சமூகத்தில் அவர்கள் சுதந்திரமாக நடமாடக்கூடியவாறு பிரத்தியேகமான ஒழுங்குகள் கட்டாயமாக செய்யப்பட வேண்டும்.

**4. விஷேட விடுமுறைகள் பெண்களுக்கு செய்து கொடுக்க வேண்டும்**

பெண்களுக்கான விஷேட விடுமுறை ஏற்பாடுகள் அவசியம். இலங்கையைப் பொறுத்தவரை தாராளமாக விடுமுறைகள் உள்ளதால் இதனைப் பற்றி அதிகம் பேசத் தேவையில்லை.

# பெண்கள் தொழில் செய்யும் போது பேண வேண்டிய விழுமியங்கள்

இவை தவிர முக்கியமான வேறு சில விடயங்களும் இருக்கின்றன. ஒருவர் தொழில் செய்வதாயின் அவரது உழைப்பு ஹலாலாக மாறுவதற்கு மிக முக்கியமான சில விழுமியங்கள் பேணப்படுவது அவசியமாகும்.

**1. தூய்மை**

நீங்கள் உழைக்கும் ஒவ்வொரு சதமும் ஹலாலாக இருப்பதற்கு, செய்யும் தொழிலைத் தூய்மையாகச் செய்தல் வேண்டும். செய்யும் தொழிலும் இபாதத் (வணக்கம்) என்ற உணர்வோடு அதனைச் செய்ய வேண்டும். அது கற்பிக்கின்ற (Teaching) பணியாக இருந்தாலும் மருத்துவம் புரிகின்ற பணியாக இருந்தாலும் அல்லது மற்றொரு தொழிலாக இருந்தாலும் தூய்மை கண்டிப்பாகப் பேணப்பட வேண்டும்.

**2. அமானத்– நம்பிக்கையும் பொறுப்புணர்வும்**

ஒருவர் தான் செய்கின்ற தொழிலைப் பற்றி, தன்னுடைய கடமையைப் பற்றி மறுமையில் அல்லாஹ்விடம் நான் விசாரிக்கப்படுவேன் என்ற உணர்வோடு தொழில் புரிய வேண்டும். அவர் தொழுகை, நோன்பு, குழந்தை வளர்ப்பு, கணவனுக்குரிய கடமைகளை நிறைவேற்றியது என்பன பற்றி தான் விசாரிக்கப்படுவது போல தன்னுடைய தொழில் சார்ந்த பொறுப்புக்கள் பற்றியும் நான் மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி இருக்க வேண்டும். இது மிக மிக முக்கியமானது.

இன்று அதிகமான பெண்கள் மிகவும் பேணுதல் உள்ளவர்களாக இருக்கின்றனர். அவள் உடையில் பேணுதலாக இருப்பாள்; நடையில் பேணுதலாக இருப்பாள்; பேச்சிலே பேணுதலாக இருப்பாள். ஆனால், அவளது தொழிலில் எந்தப் பேணுதலும் இருக்காது.

அவள் தொழிலில் அனைத்து லீவுகளையும் எடுப்பாள். காரணம் பாடசாலைக்குப் போவதை விட வீட்டிலிருந்து திக்ர், அவ்ராதுகளை செய்வோம் அல்லது தஃவா செய்து வந்தால் அதிகளவு நன்மைகளை சம்பாதித்துக்கொள்ளலாம் என்ற எண்ணம். எனவே மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய தனது கடமையை ஒழுங்காகச் செய்யாமல், அனைத்து லீவுகளையும் எடுத்து, முழு சம்பளத்தையும் எடுத்து செய்யும் தொழிலில் பேணுதல் இல்லாமல் நடந்து கொண்டால் சம்பளம் ஹராமாகும்.

**3. நேரம் தவறாமை**

நேரம் தவறாமையில் முக்கியமான ஒரு விடயம்தான் உரிய நேரத்தில் உரிய வேலையைச் செய்வது. ஆனால் தொழில் செய்வோர் உரிய நேரத்தில் உரிய வேலையைச் செய்யாமல் வேறு வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

உதாரணமாக பாடசாலையில் குறிப்பிட்ட ஒரு பாடத்திற்கு கற்பிக்கச் சென்று பயான் (மார்க்க உபதேசம்) செய்கின்றனர். பாடத்திற்குத் தயாராகாமல் சென்ற காரணத்தினால்தான் வகுப்பில் பயான் செய்கின்றனர். இவ்வாறு பாடத்திற்குத் தயாராகாமல் சென்று வகுப்பில் பயான் செய்தால் சம்பளம் ஹராமாகும்; பயான் செய்வதால் சம்பளம் ஹலாலாக மாட்டாது.

எனவே, நேரம் தவறாமை செய்யும் தொழிலுக்கு மிக முக்கியமானது. நேரம் தவறாமை, தொழில் ஹலாலாக மிக முக்கியமான நிபந்தனை. நேரத்திற்கு வேலையைச் செய்யாமல், செய்யும் வேலையை சரியாகச் செய்யாமல் தொழில் செய்தால் வருமானம் ஹராமாகும்.

## 04. திறம்படச் செய்தல்

“ஒருவர் ஒரு வேலையைச் செய்தால் அதனைத் திறம்படச் செய்ய வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகிறான்.” (தபரானி)

உங்கள் ஒவ்வொரு செயலும் இபாதத்தாக மாறுவதற்கான மிக முக்கியமான நிபந்தனைதான் தரம் (Quality).

முஸ்லிம் ஆசிரியை, குர்ஆன்- ஹதீஸைப் பேசும் ஆசிரியை, தாஇய்யா ஆசிரியை...

முஸ்லிம் டொக்டர், குர்ஆன்-ஹதீஸைப் பேசும் டொக்டர், தாஇய்யா டொக்டர்...

இவர்கள் முஸ்லிம்கள் என்பதற்கு என்ன அடையாளம்? ஹபாயாவும் தஸ்பீஹுமா?

இல்லை...! அவளிடம் நேரத்திற்கு பணியாற்றும் (Functuality) பண்பு இருக்க வேண்டும். வேலையின் விளைவு (Output) மற்றவர்கள் பார்த்து மெச்சத்தக்கதாக இருக்க

வேண்டும். அவள் எவ்வளவு அழகாக வேலை செய்கின்றாள்; எவ்வளவு திறமையாக வேலை செய்கின்றாள்; அவளுடைய பெறுபேறு (Output) எப்படியிருக்கிறது? மாணவர்களின் பெறுபேறுகள் எப்படியிருக்கின்றன? என்பதை வைத்துத்தான் தீர்மானிக்கப்படும்.

துரதிஷ்டவசமாக என்ன நடந்துள்ளதென்றால் இஸ்லாம் பேசாதவர்கள் அல்லது இஸ்லாத்தைப் பெரிதாகப் பொருட்படுத்துபவர்களல்ல என்று கருதப்படுபவர்கள் கடமை (Duty)யில் மிகவும் நன்றாக செயற்படுகிறார்கள் என்று பாராட்டப்படுகின்றனர். இஸ்லாம் பேசுபவர்கள் கடமை (Duty)யில் மிக மோசம் என்று கருதப்படுகின்றனர். இஸ்லாத்திற்கு பிழையான சாட்சி சொல்பவர்களாக நாங்கள் இருக்கிறோம்; இஸ்லாத்தைப் பிழையாக பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாக இருக்கிறோம்.

### 5. தொழில் உழைப்புக்கான வழி (Profession) மட்டுல்ல; அது ஒரு பணி (Mission)

தொழிலை வெறுமனே உழைப்புக்கான, வருமானத்திற்கான வழியாக மட்டுமன்றி அதனை ஒரு சேவையாகக் கருத வேண்டும். எந்தத் தொழிலையும் -அது சாதாரண தொழிலாக இருந்தாலும்- அதனை சேவையாகச் செய்ய வேண்டும். டொக்டராக, பேராசிரியராக, அதிபராக, ஆசிரியராக இருக்க வேண்டியதில்லை.

எந்தத் தொழிலையும் சாதாரண, உழைப்புக்கான வழியாக மாத்திரமன்றி பணி (Mission) ஆக செய்ய வேண்டும். அதனை ஒரு சேவையாக, பணியாகப் பார்க்க வேண்டும்.

இந்தப் பார்வை தொழில் செய்பவரின் மனப்பாங்கில் (Attitute) தான் தங்கியுள்ளது. நீங்கள் எதற்காக இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளீர்கள். நீங்கள் ஆசிரியையா? பொறியியலாளரா? வைத்தியரா? யாராக இருந்தாலும் பரவாயில்லை. உங்களது மனப்பாங்கு (Attitute) எப்படியிருக்கிறது என்பதைப் பொறுத்துதான் அது தீர்மானிக்கப்படுகிறது. உங்கள் மனப்பாங்குதான் நீங்கள் அந்தத் தொழிலை எவ்வாறான கண்ணோட்டத்தில் செய்கின்றீர்கள் என்பதை தீர்மானிக்கும்.

ஒருவரின் மனோநிலையைப் பொறுத்தே அது தீர்மானிக்கப்படுகிறது. அந்த மனோநிலை வந்துவிட்டால் அல்லாஹ்வின் பார்வையில் நீங்கள் எங்கு இருக்கின்றீர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் போய்விடும். ஏனென்றால் நீங்கள் புனிதமான பணியில் (Mission) இருக்கின்றீர்கள்; இபாதத்தில் இருக்கின்றீர்கள்.

உதாரணமாக, ஒரு கட்டடம் (Building) கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே 3 இளைஞர்கள் அந்த கட்டட நிர்மாண வேலையில் பணியாளர்களாகக் கூலி வேலை (Labour) செய்து கொண்டிருக்கிறார்கள். அதாவது கல் எடுத்தல், மண் எடுத்தல் போன்ற வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒருவர் அங்கு சென்று அம்மூன்று இளைஞர்களிடமும் ஒரே கேள்வியைக் கேட்கிறார். முதலாவது உள்ள இளைஞனைப் பார்த்து, தம்பி! நீ இங்கு என்ன செய்கிறாய்? என்று கேட்கிறார். அதற்கு அந்த இளைஞன் கூறுகிறான்;

“நான் இங்கு ஒரு நாளைக்கு 750 ரூபா பணத்திற்கு கல், மண் எடுக்கும் கூலித் தொழில் செய்து கொண்டிருக்கிறேன்.”

மற்றவனிடம் போய் அதே கேள்வியைக் கேட்கின்றார். அவனும் அதே வேலையைச் செய்து கொண்டிருக்கிறான். அவன் சொல்கின்றான்;

“நான் ஓர் இடத்தில் வேலை செய்தேன். அங்கு எனக்கு ஒரு நாளைக்கு 600 ரூபா கூலியாகத் தந்தார்கள். ஆனால் எனக்கு

ஒரு குடும்பம் இருக்கிறது. எனது மனைவி மக்களோடு பெற்றோரும் கூடவே இருக்கிறார்கள்; சகோதர சகோதரிகளும் இருக்கிறார்கள். எனக்கு வருமானம் போதவே போதாது. அப்போது இங்கே 150 ரூபா அதிகமாகத் தருகிறார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். எனது மனைவி மக்களை மாத்திரமல்ல எனது பெற்றோர், சகோதர-சகோதரிகளைக் கவனிக்க 150 ரூபா கூடிய வருமானம் கிடைக்கும் என்பதற்காக நான் இங்கு வந்து வேலை செய்கிறேன்.”

இப்போது உங்களிடம் கேட்கிறேன், முதலாமவர் சிறந்தவரா? இரண்டாமவர் சிறந்தவரா? நான் நினைக்கிறேன், இரண்டாமவர்தான் சிறந்தவர் என்று நீங்கள் சொல்வீர்கள்.

இப்போது அந்த மனிதர் மூன்றாவது இளைஞனிடம் செல்கின்றார். அவரும் அதே வேலையைச் செய்கின்றார். அவரிடம் போய் கேட்கிறார். “தம்பி, இங்கு நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?” அவன் சொல்லும் பதிலைக் கேளுங்கள்.

“இந்த இடத்திலே படித்த, பண்பட்ட இளைய தலைமுறை நாளை உருவாக வேண்டுமென்பதற்காக ஒரு பாடசாலைக்கான கட்டடம் கட்டப்படுகிறது. அந்த மகத்தான பணிக்கு என்னால் முடியுமான எளிமையான பங்களிப்பை செய்து கொண்டிருக்கிறேன்.”

மூன்று பேரும் செய்யும் பணிகள் ஒன்று. மூவரும் கட்டடத் தொழிலாளர்கள். மூன்று பேருடைய பார்வையையும் பாருங்கள்.

முதலாமவன், வெறுமனே தனது நாளாந்த வாழ்க்கைக்காக 750 ரூபா வருமானத்தை எதிர்பாத்து வேலை செய்கிறான்.

அதேபோல் இரண்டாமவன், தானும் வாழ்ந்து தன்னுடைய குடும்பமும் வாழ்ந்து தன்னுடைய குடும்பமும் கவனிக்கப்பட வேண்டுமென்பதற்காக 750 ரூபா பணத்திற்காக வேலை செய்கிறான்.

மூன்றாமவனும் அதே 750ரூபா வருமானத்தை எதிர்பார்த்துத்தான் வேலை செய்கிறான்; ஆனால் அவனது பார்வை எப்படியிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

‘‘இங்கு நான் வெறுமனே தொழில் மாத்திரம் செய்யவில்லை. வெறுமனே 750ரூபா அற்பமான தொகை எனக்கு முக்கியமானதல்ல. இந்த வயிற்றுப் பசிக்காக வாழ்ந்து விட்டு சாக வந்தவனல்ல. நான் ஒரு இலட்சியப் பணி (Mission)க்காக வாழ வந்தவன். என்னால் முடிந்த பங்களிப்பு, கல்லை சுமந்து கொடுப்பது; மண்ணை சுமந்து கொடுப்பதுதான். அதைவிட என்னிடம் எந்த ஆற்றலும் திறமையும் இல்லை ரப்பே! எனவே, நாளை ஒரு நல்ல இளைஞர் சமுதாயம், நல்ல தலைமுறை உருவாகுவதற்காக இந்தக் கட்டடத்திற்கு கல் சுமந்து, மண் சுமந்து வேலை செய்கிறேன்.”

நிச்சயமாக இந்த கூலித் தொழிலாளி எமது நாட்டில் இருக்கின்ற எத்தனையோ பேராசிரியர்களை விட எத்தனையோ வைத்தியர்களை விட எத்தனையோ ஆசிரிய- ஆசிரியைகளை விட சிறந்தவர் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் அவனிடம் இருக்கின்ற அந்த நோக்கு (Mission) இந்தப் படித்தவர்களிடையே இல்லை. பணம் சம்பாதிப்பதையே ஏக இலக்காகக் கொண்டு சாகாமல் சாகின்ற ஒரு புத்திஜீவி சமூகத்தைத்தான் நாங்கள் உலகில் பார்க்கிறோம்.

**முடிவுரை**

எனவே அன்புக்குரிய, மதிப்புக்குரிய சகோதரிகளே! இந்தப் பார்வை முக்கியம். எனவே பெண்கள் தொழில் செய்யலாமா? தொழில் செய்ய முடியாதா? என்பதற்கு அப்பால் இந்தப்

பார்வை, நோக்கு மிக அவசியமாகும்.

இவற்றைவிட மிக முக்கியமானவைதான் தூய்மை, நம்பிக்கை, நாணயம், பொறுப்புணர்ச்சி, தியாகம் அர்ப்பணம், நேரம் தவறாமை, தான் செய்கின்ற தொழிலை புனிதமான பணி (Vission)யாக செய்பவர்களாக இருந்தால் ஆண்-பெண் என்பதைவிட இப்படிப்பட்ட மனிதர்கள் இன்றைய உலகத்திற்குத் தேவை.

இல்லை, எப்படியாவது சம்பாதிக்க வேண்டும் எந்த வகையிலாவது சம்பாதிக்க வேண்டும் என்ன வழி என்று கேட்பதுதான் இன்றைய பார்வை-நோக்கு. இந்த நிலை மாறும் என்று சொன்னால், நிச்சயமாக ஒரு நல்ல மாற்றம் சமூகத்தில் வரும்; நாட்டில் வரும்; உலகத்தில் வரும். இப்படியான ஒரு தொழிலாளர் படை (Labour force) ஆண்-பெண் வித்தியாசமின்றி உலகத்திற்குத் தேவை; இந்த நாட்டிற்குத் தேவை; எமது சமூகத்திற்குத் தேவை.

எனவே தொழில் செய்யாத பெண்கள், தொழிலை நாடிச் செல்ல வேண்டுமென்ற அவசியமில்லை. நிம்மதியாக வீட்டில் உங்களது பணியை நிறைவாகச் செய்யலாம். நீங்களும் வீட்டிலே தொழில் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதுவும் மிகவும் பெறுமதி வாய்ந்த தொழிலை செய்து கொண்டிருக்கிறீர்கள்.

தொழில் செய்கின்ற பெண்கள் உங்களுடைய நோக்கை, போக்கை, பார்வையை இப்படி மாற்றிக் கொள்ள முடியுமா என்று சிந்தியுங்கள். முடியாவிட்டால், வீட்டுப் பணியை செய்யுங்கள். முடியுமென்றால் அந்த வீட்டுப் பணியோடு சேர்த்து, இந்த மகத்தான பணிக்கூடாக நீங்கள் மனநிறைவை அடையலாம்.

தொழில் செய்கின்ற பெண்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். ஏனெனில் தொழில் செய்யாத பெண்களை விட தொழில் செய்கின்ற பெண்களுக்கு சவால்கள் மிக அதிகம். மிகப் பெரிய அறைகூவல்களுக்கு முகங்கொடுத்தவர்களாக இருக்கிறீர்கள். அத்தகைய அறைகூவல்களை எதிர்கொண்டுதான் தொழில் செய்ய வேண்டியிருக்கிறது. இல்லாதபோது அவர்களது உலக வாழ்க்கையும் வெற்றி பெறுவதற்கில்லை; மறுமை வாழ்க்கையும் வெற்றி பெறுவதற்கில்லை என்ற செய்தியை மீண்டும் வலியுறுத்து கூற விரும்புகிறேன்.

# கேள்வி பதில்

**கேள்வி: மேற்சொன்ன நிபந்தனைகளுக்குட்படாமல் தர்மம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் ஒரு பெண் தொழில் செய்யலாமா?**

பிழையென்று சொல்வதற்குமில்லை; தடைசெய்வதற்கு மில்லை. நிபந்தனைகள் பேணப்படுமென்றிருந்தால் மிகவும் வரவேற்கத்தக்கது. ஏனென்றால் எவ்வளவு தேடினாலும் கொடுக்கும் மனம் நிறையப் பேருக்கு இல்லை; தேடித்தேடி அடுக்கும் மனம்தான் இருக்கிறதே தவிர கொடுக்கும் மனம் இல்லை. எனவே உழைத்து பிறருக்குக் கொடுக்க முடியுமென்றிருந்தால் ஆண்கள் யோசிக்கலாம், கொடுக்கும் போது நாம் ஏன் கொடுக்கக் கூடாது என்று. எனவே

கொடுப்பது வரவேற்கத்தக்கது; ஷரீஅத்தில் எந்தப் பிழையுமில்லை.

**கேள்வி: இலங்கை போன்ற நாட்டில் தொழில் புரியும் பெண்கள் பல்லின மத மக்களுடன் இணைந்து தொழில் புரிய வேண்டியிருக்கிறது. இவர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் எங்களது எல்லை அல்லது வரையறை என்ன? அவர்களுடனான எங்கள் பங்களிப்பு எவ்வாறானதாக இருக்க வேண்டும்?**

பதில்: இது விரிவாகப் பேசப்பட வேண்டிய விடயம். இலங்கை பல சமயங்களைப் பின்பற்றும் மக்கள் வாழ்கின்ற (Multi Religious Society) நாடு. சமூகத்தில் பெண்கள் தொழில் செய்கின்றபோது பல பிரச்சினைகள் வரும். இஸ்லாமிய வரம்புகளைப் பேணுவதில் உடை ஒழுங்குகளைப் பேணுவதில் நியாயமான பிரச்சினைகள் வரும்.

நான் நினைக்கிறேன் இதைக் கூட தஃவாவாக மாற்றிக் கொள்ளலாம். அதாவது இஸ்லாமிய வரையறைகளைப் பேணும்போது எவ்வாறு பெண்கள் பெண்களாக இருப்பார்கள்; பெண்கள் சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது மட்டுமல்ல பெண்கள் இஸ்லாத்தை கடைபிடிக்கும் போது மனிதர்களுடைய வெளியீடு (Output) எப்படியிருக்கும் என்பதை அடுத்த மனிதர்கள் காணமுடியுமென்றிருந்திருந்தால் அது மிகப் பெரிய தஃவாவாக இருக்கும்.

அதுதான் நான் சொன்னேன் தொழில் செய்கின்ற பெண்கள் ஏனைய பெண்களைப் போல அல்ல. நிறைய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். ஆன்மிக ரீதியான, பண்பாட்டு ரீதியான, தார்மிக ரீதியான, ஒழுக்க ரீதியான, ஷரீஆ ரீதியான ஹலால்-ஹராம் சம்பந்தப்பட்ட நியாயமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். தொழில் செய்யாத பெண்களுக்கு இந்தப் பிரச்சினை ஒப்பீட்டு ரீதியில் மிக மிகக் குறைவு. வீட்டிலிருந்தால் சவால்கள் (Challenges) குறைவு.

தொழில் செய்யும் பெண்களுக்கு நியாயமான பிரச்சினைகள் இருக்கலாம், இருக்கும் என்பது உண்மை. அவை தனியாக அலசப்பட்டு கலந்துரையாடப்பட்டு பதில் சொல்லப்பட வேண்டும். பொதுவாக இவற்றையெல்லாம் பிரச்சினைகளாகக் கருதாமல் சவாலாகக் கருதி முகங்கொடுப்போம் என்று பார்க்க வேண்டும். ஆனால் முகங்கொடுக்கப் போய் தன்னையே அழித்துக் கொள்ளும் நிலை வந்தால் தன்னுடைய ஆன்மிகத்தை, ஒழுக்கத்தை இழக்கும் நிலை, எங்களை நாம் இழக்கும் நிலை வந்தால் எங்களை நாம் ஏமாற்றிவிடக் கூடாது.

நாங்கள் மற்றவர்களைப் பார்க்க வேண்டியதில்லை. எங்களுக்குத் தெரியும் எங்களது நிலை சுபாவம், இயல்பைப் பொறுத்தவரை எங்களுக்கு இது சரிவருமா சரிவராது என முடிவு எடுக்க வேண்டும். ஏனெனில் இதில் Risk எடுக்க முடியாது. ஏனென்றால் எங்களுடைய மறுமை வாழ்க்கை விடயத்தில் நாம் Risk எடுக்க முடியாது. அவருக்கு இயலும் என்றால் எனக்கும் இயலும் என்று செயற்பட முடியாது.

நாம் தனியாக வந்தோம்; தனியாகவே போக வேண்டும். இடையில்தான் இந்த உறவுகள் எல்லாம். பெற்றோர், பிள்ளை, கணவன் எல்லா உறவுகளும். ஆனால் மறுமையில் யாரும் உதவ மாட்டார்கள்.

இதை நாம் மறந்து விடக் கூடாது. இன்று நாம் யாருக்காக உழைக்கிறோம்? பிள்ளைகளுக்காக, பெற்றோருக்காக. அதற்கு முன்னர் நாம் எம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நாம் எம்மைக் காப்பாற்றிக் கொண்டுதான் மற்றவர்களைப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, விமானத்தில் பயணிக்கும் போது முதலில் ஒரு அறிவுறுத்தல் வரும். அதாவது ஒட்சிசன் இல்லாமற் போனால் உங்களுக்கு முன் ஒரு முகக் கவசம் (Mask) விழும். முதலில் நீங்கள் அதனை உங்களுக்கு அணிந்து கொள்ளுங்கள். கையில் குழந்தை இருந்தாலும் முதலில் குழந்தைக்கு அணிய வேண்டாம். முதலில் உங்களுக்கு அணிந்து கொண்டு பின்னர் குழந்தைக்கு அணிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் நீங்கள் உயிரிழந்தால் உங்கள் குழந்தையும் உயிரிழக்க வேண்டிவரும்.

எனவே உலகத்திலேயே இப்படித்தான். முதலில் எங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எங்களது ஒழுக்கம், ஆன்மிகம், இபாதத் என்பவற்றைத் தியாகம் செய்து, அல்லாஹ் மறுமையிலும் எங்களிடம் கேட்கப்போகும் அடிப்படையான விடயங்களைத் தியாகம் செய்து விட்டு உழைத்து சம்பாதித்து மற்றவர்களை வளர்க்க வேண்டும் என்ற தேவை இல்லை. எனவே யாரும் மறுமையில் உதவப் போவதில்லை.

“அந்த நாளில் உங்கள் பிள்ளைகளோ, உங்கள் சொத்து செல்வங்களோ உங்களுக்கு எந்தப் பிரயோசனத்தையும் தர மாட்டார்கள். யார் அல்லாஹ்வை அஞ்சி, பயந்து தூய்மையான உள்ளத்தோடு வருகின்றாரோ அவரைத் தவிர” (26: 88-89)

என்று அல்லாஹ் கூறுகின்றான்.

மறுமையில் இதே பிள்ளைகளைப் பார்த்துத்தான் மனிதர்கள் சொல்வார்கள்;

“மறுமையில் நரகத்திற்கு தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு மனிதன் சொல்வான்; யா அல்லாஹ் எனது பிள்ளைகள் எனக்குப் பதிலாக எடுத்து விட்டு என்னை சுவனத்தில் நுழையச் செய்து விடு.” (70: 11)

நாம் இப்படி செய்வோமா? என்று உலகத்தில் நாம் கேட்போம். சுனாமியின் போது இதனைக் கண்கூடாகக் காணக் கூடியதாக இருந்தது! ஹஜ்ஜில் கூட சில வருடங்களுக்கு முன் மினாவில் தீப்பற்றிய போது இப்படி நடந்தது! உலகத்திலேயே இப்படித்தான். இதுதான் யதார்த்தம் (Reality). பலர் வெளிப்படையாகச் சொல்வதில்லை. இது உண்மை.

பிள்ளைகள் மட்டும் போதாத போது மனிதன் கூறுவான், எனது கணவர் இருக்கிறார் அல்லது எனது மனைவி இருக்கிறாள் என்று. அதுவும் போதாதபோது எனது முழுக் குடும்பமும் இருக்கிறது என்று கூறுவான். தாய், தந்தை, சகோதர, சகோதரிகள் அனைவரையும் நரகில் போட்டுவிட்டு என்னை மட்டும் நரகத்திலிருந்து விடுதலை அடையச் செய்துவிடு என்றும் கூறுவான். அதுவும் போதாது எனும் கட்டத்தில் மனிதன் சொல்வான்:

“பூமியிலுள்ள அனைவரையும் எனக்குப் பதிலாக நரகில் தள்ளிவிட்டு என்னை மாத்திரம் சுவனத்தில் நுழைவித்துவிடு ரப்பே!” (70:14)

“கவனம்! ஞாக்கிரதை! அது கொழுந்துவிட்டெறியும் நெருப்பாகும். அது இந்தத் தோலைக் கரித்தே தீரும்” (70: 15-16)

என்று அல்லாஹ் எச்சரிக்கிறான். அல்லாஹ் கேள்வியையும் சொல்லித் தந்து பதிலையும் சொல்லித் தருகின்றான். எப்படி மறுமை விசாரணையை எதிர்கொள்ளப் போகிறீர்கள். அதற்கு முன்னர் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டியுள்ளது. எனவே, எனது பிள்ளைகளுக்காக எந்தத் தியாகத்தையும் செய்வேன் என்று கூற முடியாது. அவர்களுக்காகத்தான் இதனையெல்லாம் செய்கின்றேன் என்று சொல்லித் தப்ப முடியாது.

*அதனால் தொழில் செய்வோர் இந்த வரையறைகளை பேணி தொழில் செய்யுங்கள். கண்டிப்பாக சொல்ல வேண்டிய விடயம், கணவர் ரஸ்ஸாக் (ரிஸ்க் அளிப்பவர்) இல்லை; கணவருக்கு வருமானம் குறையும் போது மனைவி ரஸ்ஸாக் இல்லை; தாய், தந்தையரும் ரஸ்ஸாக் அல்ல. அனைவரும் அப்துர் ரஸ்ஸாக் தான்; ரஸ்ஸாக்கின் அடிமைகள். யார் ரஸ்ஸாக்? அல்லாஹ்.*

“உங்களுக்கு உணவளிப்பவர்களும் நாங்களே; அவர்களுக்கு உணவளிப்பவர்களும் நாங்களே.” (6: 151)

“அவர்களுக்கு உணவளிப்பவர்களும் நாங்களே; உங்களுக்கு உணவளிப்பவர்களும் நாங்களே.” (17: 31)

“நீங்கள் தற்கால வறுமையை அஞ்சியோ எதிர்கால வறுமையை அஞ்சியோ உங்களது குழந்தைகளை இல்லாமலாக்கிக் கொள்ள வேண்டாம்.” (17: 31)

*என்று அல்லாஹ் கூறுகின்றான். ஏனென்றால் ரிஸ்க் தருபவன் அல்லாஹ். நாம் ரஸ்ஸாக் உடனிருந்தால் அப்துர் ரஸ்ஸாகை பயப்படத் தேவையில்லை. இன்று எல்லோரும் அப்துர் ரஸ்ஸாகின் பின்னால் செல்கின்றனர்; ரஸ்ஸாக்கை விட்டுவிட்டனர். எனவே, ரிஸ்க் தருபவன் அல்லாஹ் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.*